விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

# இலங்கை அனுமதித்தால் 15 நாட்கள் விசாரணை

## ஐ.நா விசாரணைக் குழு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசு அனுமதித்தால் மனித உரிமை விவகாரம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைக்குழுவின் நான்கு விசாரணையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவும் 15 நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விசாரணையாளர்களுக்கு மேலதிகமாக இரண்டு விசேட நிபுணர்கள் இலங்கைக்கு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு விசாரணை செயற்பாட்டில் பங்கெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய கடற்படை!



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் கடற்படையினரால் மேற்கொள்ளப்படவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை இரண்டாவது முறையாகவும் நேற்று தடுத்து நிறுத்தப்பட்ட அதேவேளை இது தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் கடற்படையினர் செயற்பட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## தென்னாபிரிக்காவின் முயற்சி நல்லிணக்கத்திற்கு உதவும்

### புரிந்து கொள்ளவேண்டும் என்கிறார் திஸ்ஸ

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு தென்னாபிரிக்கா உதவ முன்வந்திருப்பது சாதகமான சந்தர்ப்பமாகக் கருதுவதாக லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கை மனித உரிமைகளை மீறியதாக குற்றம் சுமத்தும் சர்வதேச சூழ்நிலையில், தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ராமபோஷவின் இலங்கை விஜயத்தின் மூலம் அந்த குற்றச்சாட்டுகளுக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

19 ஆம் பக்கம் பார்க்க....



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இத்தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பக்தியுடன் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு

## வடக்கு மாகாண ஆளுநராக சந்திரசிறி மீண்டும் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த பல தடைகளை ஏற்படுத்திவரும் முன்னாள் இராணுவ அதிகாரியாகவிருந்த மேஜர் ஜென்றல் ஜி.ஏ.சந்திரசிறியை ஆளுநர் பதவியிலிருந்து விலக்கி சிவில் நிர்வாகத்துடன் தொடர்புடைய ஒருவரை ஆளுநராக நியமிக்குமாறு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் மாகாண சபை

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஆலயத்தை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயமான மயிலிட்டி பகுதியில் அமைந்திருந்த மருதடி சித்தி விநாயகர் ஆலயத்தினை தற்போது காணவில்லையென ஆலய நிர்வாக சபையின் உபதலைவர் தெரிவித்தார்.

சென்ற வருடம் ஆலயத்திற்குச் செல்ல இராணுவத்தினரால் அனுமதியளிக்கப்பட்ட போது, மருதடி சித்தி விநாயகர் ஆலயத்திற்கு தானும்,

19 ஆம் பக்கம் பார்க்க....

## மக்கள் எதிர்ப்பு

### காணிகள் அளவிடும் பணிநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் கடற்படையினால் சுவீகரிக்கப்படவிருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் அளவிடும் பணி நேற்று இரண்டாவது முறையாகவும் மக்களினாலும் மக்கள் பிரதிநிதிகளினாலும் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. அதேவேளை

19 ஆம் பக்கம் பார்க்க....

### 25 வருடங்களிற்கு பின்னர்

## மயிலிட்டி கண்ணகை அம்மனை மக்கள் தரிசிக்க அனுமதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயிலிட்டி கண்ணகை அம்மன் ஆலயத்தில் பொதுமக்கள் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு நேற்று வெள்ளிக்கிழமை 25 வரு

20 ஆம் பக்கம் பார்க்க....

### மனோவின் பேச்சில்

## புலனாய்வு விசாரணை

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசரை இலங்கைக்கு வரவழைத்து அவரை அவமானப்படுத்தும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருவதாக அதிகாரத்தை பரவலாக்கி நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் அமைப்பாளரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் வெளியிட்ட தக

19 ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர் பிரச்சினை குறித்து யாழில் மக்கள் போராட்டம்

### ஆதரவளிக்கிறது த.தே.கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் தேசிய மீனவா ஒத்துழைப்பு இயக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நகரத்தில், தமிழ் மக்கள் படும் அவலங்கள் குறிப்பாகமீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் போராட்டமொன்றைநடத்துவது

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

எங்கள் ஊடகப்பங்காளரை அகவை அறுபதில் வாழ்த்துவதில் பூரிப்படைகின்றோம்

வணிகர்களிற்கு வளமான ஊடகப்பங்காளன்,
இளையதலைமுறையினரின் இதயம் கவர் எதிர்கால நம்பிக்கைப்பங்காளன், நலிந்தோர் நலன் காக்கும் பாசப்பங்காளன்
நீவிர் நூற்றாண்டு காண வாழ்த்தும்



திசைகாட்டி குழுமத்தலைவர்,
பட்டயக்கணக்காளர்
திரு. S.செல்வராஜா
அவர்கள்

அகவை 60



(7003)

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
ஈ.சரவணபவன்
(தலைவர், உதயன் குழுமம்)



தலைவர், உறுப்பினர்கள், இயக்குநர் சபை,
திசைகாட்டி குழுமம்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
0212219016,0215689090

## விற்பனைக்கு உண்டு

ஐஸ்கீறிம் தொழிற்சாலைக்குரிய பொருட்களுடன், இரண்டு வான்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள :
0779145916

(சி-7919)

# போலி டொலர் தாளுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் 1 மில்லியன் அமெரிக்க டொலர் போலி தாள்களை வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட இருவரை கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்ததாக, யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி. விமலசேன நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் பொலிஸ் தலைமையகத்தில் இம்மாதத்திற்கான முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், நல்லூர் மற்றும் குருநகர்ப் பகுதியினைச் சேர்ந்த இருவர் விருந்தினர் விடுதியில் வைத்து டொலர் தாளுடன் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட டொலர் தாளினை, யாழ். நீதிமன்றத்தில் அனுமதி பெற்று இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.(செ-11)

# வெடி விபத்தில் சிக்கி இரு பெண்கள் காயம்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மந்துவில் பகுதியில் விறகுக்குச் சென்ற பெண்கள் இருவர் வெடிபொருள் வெடித்ததில் படுகாயம் அடைந்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

நேற்று பிற்பகல் 5.30மணியளவில் விறகு எடுப்பதற்காக ஆனந்தபுரம் 5ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஐவர் மந்துவில் பகுதிக்கு சமீபமாக உள்ள சிறிய காட்டுப் பகுதிக்குச் சென்றிருக்கின்றனர்.

அங்கு விறகு வெட்டும்போது அவர்கள் பயன்படுத்திய கோடரி ஒன்று வெடிபொருள் ஒன்றில் பட்டதில் அது வெடித்துச் சிதறியிருக்கின்றது.

சம்பவத்தில் ஆறு பிள்ளைகளின் தாயாரான சீவரத்தினம் அம்பிகா (வயது 50). மற்றும் மூன்று பிள்ளைகளின் தாயரான பிரியதர்சினி (வயது 24) ஆகியோரே படுகாயம் அடைந்திருக்கின்றனர்.

அவர்கள் இருவரும் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர்களில் அம்பிகா என்ற பெண மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (செ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சண்முகநாதன்

பன்னாலை, அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வைரவ புளியங்குளம், மாடசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகநாதன் 09.07.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – மூத்ததங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் – தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்ற C.A.சண்முகநாதனின் (முன்னாள் சுகாதார திணைக்கள பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், அருணாதேவி (இளைப்பாறிய மருந்தாளர் – வவுனியா மெடிக்கல்ஸ்), தர்மபூபதி (முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), சிறிஸ்கந்தராசா (கனடா), விஜயராணி (வவுனியா மெடிக்கல்ஸ்), Dr.சிறிபவானந்தராசா (பிரதிப் பணிப்பாளர் – யாழ்.போதனா வைத்தியசாலை), சிறிபாஸ்கரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி (மருந்தாளர்) மற்றும் குகதாசன் (ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்), ரோகிணி (கனடா), ஓங்கார வடிவேல், சிவரஞ்சினி, சத்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசாந்தி – Dr.K.பிரதீபன் (VOG அவுஸ்ரேலியா), Dr.K.செல்வஸ்கந்தன் (வைத்தியர் – யாழ்.போதனா வைத்தியசாலை), சாரூஜா (விவசாயபீட விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்), துவாகரன் – கலைவாணி (UK), கோகுலன் (முகாமையாளர் – சம்பத்வங்கி, மன்னார்), வேதசாருணி – ஜெயசீலன் (UK), ரமணி (கனடா), உமாரமணன் (கனடா), இஷானி, லக்ஷன், கேசிகன், கீர்த்தனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கௌசிகன், கேசன்யா, ரோஷன், அனுருத்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, விநாயகமூர்த்தி, அன்னலட்சுமி, மனோன்மணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வவுனியா தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

23/27, குளக்கட்டு வீதி,
(மாடசாமி கோயிலடி)
வைரவ புளியங்குளம்,
வவுனியா.
தொ.பே : 024 222 0305

Dr.S.சிறிபவானந்தராசா (மகன்)
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
அம்பனை, பன்னாலை, தெல்லிப்பழை.
தொ.பே : 077 757 0161

(7001)

கிறபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா

விரிவான இலவச கருத்தரங்கு
நாளை ஞாயிற்றுக்கிழமை
12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர் (CSC India)
இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

CSC ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ். நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் தென்னாபிரிக்காவை வரவழைத்தது இரட்டை கேளித்தனம்

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பிரச்சினைகளில் வெளிநாடுகள் தலையிட இடமளிக்க போவதில்லை என புளுகும் அரசாங்கம் தென் ஆபிரிக்காவை வரவழைத்தது இரட்டை கேளித்தனம் என ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

தென் ஆபிரிக்காவை அழைத்ததன் மூலம் அரசாங்கத்தின் இரட்டை வேடம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். சிறில் ரமபோஷாவின் வருகை தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள ஹேரத், யார் என்ன கூறினாலும் நாட்டின் தேசிய பிரச்சினையை அடிப்படையாக கொண்டே சிறில் ரமபோஷா இலங்கை வந்தார்.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சு வார்த்தைக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இலங்கையின் நாடாளுமன்ற குழுவிற்கு கடந்த வருடம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பிரதி நிதிகள் தென் ஆபிரிக்கா சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியது இரகசியமான விடயமல்ல. தேசிய பிரச்சினை பற்றியே அங்கு பேசப்பட்டுள்ளது.இந்த பயணத்திற்கு பதில் பயணமாகவே சிறில் ரமபோஷாவின் இலங்கை விஜயம் அமைந்தது.இலங்கை வந்து தேனீர் அருந்தி, உணவு உண்டு விட்டு விளையாட்டுப் போட்டியை ரசித்து விட்டு செல்லவே ரமபோஷா இலங்கை வந்தார் என்று கூறுவார்களேயானால், அப்படி கூறுபவர்களின் மூளையில் குறைபாடு இருக்கும். இவை மிகப் பெரிய நகைச் சுவை கதைகள்.இது ரமபோஷாவின் விநோத பயணம் என்று விமல் வீரவன்ச கூறுவாரேயானால், அது வெட்கத்தில் கூறும் கதையாகும்.தென் ஆபிரிக்காவின் தலையீடு அவசியமில்லை. அப்படி நடந்தால், அரசாங்கத்தில் இருந்து விலகுவோம் என புளுகிய வீரவன்ச, தற்போது பாறை மீது மலம் கழித்த பூனையை போல் தடுமாறுகிறார்.

சர்வதேச தலையீடுகளை எதிர்ப்பதாக அரசாங்கம் ஒரு புறம் கூறிவருகிறது. எந்த துரதிர்ஷ்ட சாலிகளுக்கும் இலங்கைக்குள் வர இடமளிக்க போவதில்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பேசி வருகிறார். ஆனால் சிறில் ரமபோஷா வந்தார்.

ரமபோஷா அதிகாரபூர்வமாக இலங்கை வரவில்லை என்றால், அந்த பயணம் வேறு விதமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது அப்படி நடக்கவில்லை. இது இராஜதந்திர பயணம்.ரமபோஷாவின் விஜயத்தின் மூலம் அரசாங்கத்தின் இரட்டை வேடமோ மீண்டும் மீண்டும் ஒப்புவிக்கப்பட்டது.நாட்டுக்கும் மக்களுக்கும் ஒன்றை கூறும் அரசாங்கம் உலகத்திற்கு வேறொன்றை கூறி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.உண்மையில் இந்த அரசாங்கம் மற்றுமொரு இராஜதந்திர பொறியில் சிக்கியுள்ளது. இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் யோசனைக்கு வாக்களிக்கவில்லை.அவ்வாறு வாக்களிக்காத இந்த நாடுகள் வேறு விதமாக தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்- 2014

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 14.07.2014-25.07.2014 ஆம் திகதி வியாழன் முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | 570/- (வற் வரி, தே.க.வரி உள்ளடங்கலாக) |
| கேள்வி படிவம் விநியோகிக்கும் திகதி | 14.07.2014-24.07.2014 பிற்பகல் 2.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல் | 25.07.2014 முற்பகல் 10.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | 25.07.2014 முற்பகல் 10.30 மணிக்கு |

துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம்- 10,000/-
ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம்- 2000/-

விண்ணப்படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 25.07.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித் தொகையினை 31.07.2014 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு:-

1.கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும் விளம்பரங்கள், விளம்பரப்பதாதைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

2. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. ஆகக் கூடிய தொகையாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/- உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10/- உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்திற்கு பணம் அறவிடப்படலாகாது.

4. உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

(சி-7904)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் வரதராசா.ரவிவர்மன்
(15 வயதுப் பிரிவு400m 1ம் இடம்)

செல்வன் மன்மதருபன்.அஜய்
(18 வயதுப் பிரிவு 100m, 200m 2ம் இடம்)

எமது பாடசாலையின் மாணவர்களாகிய செல்வன் வ.ரவிவர்மன், செல்வன் ம.அஜய் ஆகியோர் 2014ம் ஆண்டு வடக்கு மாகாண பாடசாலைகளிற்கிடையிலான தடகளப் போட்டியில் சிறப்பான பேறுகளை பெற்று தேசிய மட்ட போட்டிகளிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசிய மட்டப் போட்டிகளிலும் சிறப்பான பெறுபேறுகளை பெற வாழ்த்துவதுடன், இவர்களை சிறப்பான முறையில் பயிற்றுவித்த எமது பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் திரு.சி.சுரேந்திரா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க
பாடசாலை

c7905


## இராசி பலன்

**12.07.2014**
**(ஆனி 28, சனிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு**
**பூரணை மாலை 5.44 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 7.20 மணிவரை**
**இராகுகாலம் 8.59-10.29 மணிவரை**
**சுபநேரம் 2.59-4.29 மணிவரை**
**பூரணை விரதம்**

வளவன்

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, போசன சுகமுண்டு, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்:** அபூர்வ சந்திப்புகள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கடகம்:** உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**கன்னி:** பொருளாதார நிலை உயர என்ன வழியென்று நினைப்பீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் ஈடுபாடு காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**துலாம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:** ஆழ்ந்த சிந்தையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**மகரம்:** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப விரயங்கள் கூடும், தொழில் விருத்தியுண்டு.

**கும்பம்:** உன்னதமான வாழ்க்கைக்கு அத்திபாரம் அமைத்துக் கொள்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும், பிறர் உதவியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்து மோதியதில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயம்

(கரணவாய்)

வவுனியா தனியார் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து முச்சக்கரவண்டியுடன் மோதியதில் முச்சக்கரவண்டிச்சாரதி படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வல்வை நாலு சந்தியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றது.




இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.செல்வச்சந்நிதியில் இருந்து நெல்லியடி நோக்கி பயணித்த குறித்த முச்சக்கர வண்டியும் உடுப்பிட்டியில் இருந்து பயணித்த குறித்த தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்ததுடன் சாரதி தலையில் பலத்த காயங்களுக்குள்ளானார். இதில் நெல்லியடியைச் சேர்ந்த மார்க்கண்டு தரன் (வயது 35) என்பவரே படுகாயமடைந்த வராவார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் காயமடைந்த பிரஸ்தாப நபரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (2-60)

நன்றி-அததெரண




# மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் நவீன முறையில் புனரமைக்கப்படும்

## அமைச்சர் டக்ள்ஸ் உறுதி

(மானிப்பாய்)

யாழ்.மத்திய கல்லூரி வளாகத்திலுள்ள நீச்சல் தடாகம் விரைவில் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கல்லூரி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்பப் பிரிவு சிறுவர் பூங்காவின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் கல்லூரியின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளின் வளர்ச்சிக்காக என்னால் முடிந்தளவு உதவிகளை செய்து வருகின்றேன்.

இச்சிறுவர் பூங்காவை மாணவர்களின் கற்றல் மற்றும் விளையாட்டு திறன்களை மேம்படுத்தும் முகமாகவும் அவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை வளர்த்தெடுக்கும் முகமாகவும் எதிர்காலத்தில் இதனை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும்.

அத்துடன், கல்லூரி சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மகிந்தோதய தொழில்நுட்பப் பீடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் கல்வியமைச்சருடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

இதனிடையே ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது கல்லூரியின் சாரணர், குருளைச் சாரணர் மற்றும் கடற்சாரணர் ஆகியோருக்கான சீருடைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் நவீனமுறையில் புனரமைக்கப்படவுள்ள நீச்சல் தடாகத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய் மாணவர் சங்கத் தலைவர் தமிழழகன், ஆரம்பப் பிரிவு உதவி அதிபர் செல்வி சுமதி கந்தசாமி உள்ளிட்ட கல்லூரி சமூகத்தினர் கலந்து கொண்டனர். (2-23)

# சட்ட விரோதமாக பனை மரங்களை ஏற்றிச் சென்ற ஹன்ரர்கள் சிக்கின

## நெல்லியடி பொலிஸார் கைப்பற்றினர்



சட்ட விரோதமாக பனை மரங்களை ஏற்றிச் சென்ற இரு ஹன்ரர் வாகனங்கள் நேற்று முன்தினம் துன்னாலை பகுதியில் நெல்லியடிப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த வேளை இரு ஹன்ரர் வாகனங்கள் பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்டது.

அவ் வேளை சாரதி ஒருவர் ஹன்டரை விட்டு இறங்கிதப்பி ஓடியுள்ளார்.

இதன்போது இன்னொரு சந்தேக நபரான சாரதி பொலிஸாரிடம் அகப்பட்டதுடன் இரு ஹன்டர் வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றி நெல்லியடிப் பொலிஸ் பிரிவிற்கு கொண்டு சென்றனர்.

இதே வேளை சந்தேக நபரான சாரதிமீது நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டதுடன்இன்னொரு சந்தேக நபரான சாரதியை பொலிஸார் தேடி வருகின்றனர். (செ-60)

# சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன்யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 20 வயதேயான இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மாலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த ஜெயாகரன் அஜித் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.போதனாவைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

விசாரணையின் போது உயிரிழந்த இளைஞரின் தாய் குறிப்பிடுகையில், தனது மகனான அஜித் தன்னிடம் ஹன்ரர் வாகனம் வாங்குவதற்கு பணம் தருமாறு கேட்டார்.

இருப்பினும் அதற்கு தான் பணத்தை கொடுக்க மறுப்பு தெரிவித்ததாகவும் இதனால் வீட்டிற்குள் சென்று மண்ணெண்ணையை தன்மீது ஊற்றி பற்ற வைத்துக் கொண்டார்.

இதனால் தீக்காயங்களுக்குள்ளான அவர் உடனடியாக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த 04 ஆம் திகதி மாலை இடம் பெற்றதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த 9 ஆம் திகதி மாலை சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார். (2-6)

# வலி.வடக்கு பிரதேச சபையால் 21 பேருக்கு நிரந்தர நியமனம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஆளணிவெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை யின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 7, 8, 9 ஆம் திகதிகளில் பிரதேச சபையால் நடத்தப்பட்ட நேர்முகத் தெரிவில் சித்தி பெற்றோர் 21 பேரின் பெயர்பட்டியல்கள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தன.

ஆளுநர் இந்த நியமனங்களை வழங்குவதற்கான அனுமதியை இம் மாதம் 5 ஆம் திகதி வழங்கியிருந்தார். அதனடிப்படையில் நேற்றுக்காலை 9 மணிக்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் சபை மண்டபத்தில் நடை பெற்றது.

அந்தக் கூட்டத்தில் இந்த 21 பேரின் நியமனக் கடிதங்களையும் வழங்குவதற்கான அங்கீகாரத்தை தவிசாளர் சபையிடம் கேட்டிருந்தார்.

அதற்கான அங்கீகாரத்தை உறுப்பினர் சி.ஹரிகரன் முன்மொழிய பொ.தங்கராசா வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்பின் 10 மணிக்கு நியமனக் கடிதங்ளைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் வழங்கினர். (2)



யாழ். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் 130ஆவது அகவையை நோக்கிய பயணம் மற்றும் சிந்மயம் மலர் வெளியீடு, பாடசாலை பெயர்ப்பலகை திரைநீக்கம் மற்றும் பாடசாலை இணையத்தளம் ஆரம்பம் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிந்மயம் நூலின் முதற்பிரதியை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெளியிட்டு வைப்பதையும், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் சிறப்பு பிரதியை பழைய மாணவர் சங்கத் தலைவர் சி.முஜீபனுக்கு வழங்குவதையும், முதன்மை விருந்தினர் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் பாடசாலை அதிபர் ஆ. பேரின்பநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும்,கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரங்களை சேகரிக்கும் நோக்கில் தென்னாபிரிக்க குழு இலங்கை வந்தது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தலைவர் குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**சர்வதேச விசாரணைக்கு தேவையான மேலதிக ஆதாரங்களை சேகரிக்கும் நோக்கிலேயே தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழு இலங்கை வந்தது. இவை அனைத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சதித்திட்டம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.**

இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்ட தென்னாபிரிக்க பதில் ஜனாதிபதி சிறில் ரமபோஷா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்குவதென தெரிவித்தனர். இது தொடர்பில் கருத்து கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தென்னாபிரிக்கா தலையிட்டு எமக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கான தீர்வினை நாமே பெற்றுக்கொள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் பெரியளவில் இன முரண்பாடுகள் இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேசத்திடம் சித்திரித்து நாட்டில் இல்லாத பிரச்சினைகளை உருவாக்க நினைக்கின்றனர். அதன் விளைவாகவே இன்று இலங்கைக்கு சர்வதேசத் தலைவர்களின் அடுத்தடுத்த விஜயங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு இருதரப்பினருடனும் பேச்சு நடத்தி சென்றுள்ளனர்.

ஆனால் உண்மையிலேயே தென்னாபிரிக்கா இலங்கையில் பேச்சு நடத்தும் நோக்கில் வரவில்லை. இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை இன்று இலங்கைக்கு வெளியில் ஆரம்பித்துள்ளது.

யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொய்யான ஆதாரங்களுடன் சர்வதேசம் இலங்கையை தண்டிக்க தயாராக உள்ளது. இவ்விசாரணைக்கு மேலும் ஆதாரங்களை சேகரித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆசையை நிறைவேற்றிக்கொடுக்கும் நோக்கத்திலேயே தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வந்தனர்.

அவர்கள் அரச தரப்புடன் பேசுவதை விடவும், கூட்டமைப்பினருடனும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கின் நிலைமைகள் தொடர்பில் மேலும் பல தவறான ஆதாரங்களை கொண்டு சேர்க்கவே ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் இவை அனைத்தையும் விளங்கிக் கொள்ளாது சர்வதேசத்தை நாட்டுக்குள் இடமளிப்பது எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்திற்கே அச்சுறுத்தலாக அமையும்.

மேலும், இன்று இடம்பெறும் சம்பவங்கள் அனைத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திட்டமிட்ட சூழ்ச்சிகள். அவர்களின் சதித்திட்டம் இதுவரையில் சரியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதை அரசாங்கம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதேபோல் இலங்கையின் பிரச்சினைகளுக்கு தென்னாபிரிக்கா தலையிட்டு தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தேவை எமக்கில்லை.

இலங்கையில் யுத்தமொன்று இடம்பெற்றபோது எவரும் தீர்வு விடயத்தில் பேசவில்லை. இப்போது நாமாக யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்துள்ளோம் என்றார். (2)

# காணாமற்போனோர் தொடர்பில் 19 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

30 வருட கால யுத்தத்தினால் காணாமற்போனோர் தொடர்பில் இதுவரையில் 19 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

கடந்த 5, 6, 7, 8 ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் நடத்தப்பட்ட விசாரணையின் போது 387 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 129பேரிடம் நேரடியாக விசாரணை மேற்கொண்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2013ஆம் ஆண்டு 15ஆம் திகதி எமது ஆணைக்குழு இயங்கத் தொடங்கியது. ஆன்று தொடக்கம் இன்றுவரை அதில் தமிழர் தரப்பிலிருந்து 12 ஆயிரத்து 590 முறைப்பாடுகளும் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஆயிரத்துக்கு உட்பட்ட முறைப்பாடுகளும் இராணுவ தரப்பிலிருந்து 5 ஆயிரம் முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதுவரை வடக்கு, கிழக்கின் திருகோணமலை, அம்பாறை, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு நேரடியாக விசாரணைகளுக்குச் சென்றால் மேலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட திணைக்களத்தின் பிரதி சட்ட அலுவலகர் திருமதி மனோகரி இராமநாதன், இந்த ஆணைக்குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எங்களால் பதியப்பட்ட சகல விசாரணைகளையும் சட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்படும்.

ஜனாதிபதியினால் ஏற்படுத்தப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஓர் அங்கமாகவே இந்த காணாமற் போனோர்முறைப்பாட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட் டுள்ளது என்றும் பரணகம மேலும் தெரிவித்தார். (2)

# முஸ்லிம் அமைச்சர்கள் இணைந்து கூட்டறிக்கை ஒன்று வெளியீடு

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌசி, றிசாத் பதியூதீன், பஷீர் சேகுதாவூத் மற்றும் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் அறிக்கையைத் தயாரித்துள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஆதாரமற்ற காரணங்களை கற்பிப்பது காயங்களை மேலும் பெரிதாக்கும்.

இலங்கையில் பயங்கரவாதம் உள்ளது என்ற இந்த பிரசாரங்களின் பின்னணியில் தவறான எண்ணப்பாடுகள் இருக்கின்றன.

நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகம் தேசிய அதிகார மையங்களுக்கு மதிப்பளிப்பதுடன் சட்டம் மற்றும் ஒழுங்கை தொடர்பான விடயங்களிலும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் முஸ்லிம் சமூகம் எந்த சூழ்நிலையிலும் பயங்கரவாதத்திற்கு ஆதரவு வழங்கியதில்லை என்பதுடன் அதனை ஊக்குவித்ததுமில்லை.

அத்துடன் எந்த நாட்டுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் என்ற குழுவையும் இலங்கையின் முஸ்லிம் சமூகம் பொறுத்து கொள்ளாது என்பதை முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் உறுதியாக தெரிவித்து கொள்வதாகவும் அமைச்சர்கள் [illegible] (2)


உங்களுக்கு பாலியல் ரீதியான ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் உங்கள் இரகசியங்களை பாதுகாத்து நாம் உதவுவோம்.

சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தின் தலையாரி செயற்றிட்டம்

இனப்பெருக்கம் மற்றும் பாலியல் சுகாதார ஆலோசனை மையம்

தொலைபேசி - 021 221 7557
021 373 4618

பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(7847)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 59 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BIT / Supervisor (பின்லாந்து PR)<br>தொ.இ: B/3365 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 12.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BFA பட்டதாரி /ஆசிரியர்<br>தொ.இ: G/3372 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 56 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA, PGD in Development, CMA / நிதி நிர்வாக முகாமையாளர்<br>தொ.இ: B/3366 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: விவசாய பட்டதாரி /போதனாசிரியர்<br>எதிர்பார்ப்பு: RC ம் பார்க்கலாம்<br>தொ.இ: G/3376 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 52.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / சர்வதேச கப்பல் மாலுமி<br>தொ.இ: B/3368 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 13.25 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, CIMA Part, Accounting Finance – Final year (UK – Student Visa)<br>தொ.இ: G/3377 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 16.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, NCT / Radio Grapherஎதிர்பார்ப்பு: சைவ போசனம<br>தொ.இ: B/3369 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 30 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/3378 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடு செய்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது

## ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவின் பிரச்சினையையும் இலங்கை பிரச்சினையையும் ஒன்றாக கருத முடியாது. இலங்கையை பொறுத்தவரை விடுதலைப் புலிகளே பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியதாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார்.**

தொலைக்காட்சி ஒன்றில் இடம் பெற்றஅரசியல்நிகழ்ச்சி ஒன்றில் அவர் இந்தக்கண்டனத்தை வெளியிட்டார்.

அவர்தொடர்ந்து கூறுகையில்,

இந்நிலையில் தென்னாபிரிக்க விசேட பிரதிநிதி சிறில் ராமபோஷா இலங்கையில் வந்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணபதற்காக அரசியல் அமைப்பில் மாறறங்களை செய்ய வேண்டும்என்று கூறுவதற்குஎவ்வித அருகதையுமில்லை.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தையே குறைகூற வேண்டும் என்று வர்ணசிங்க குறிப்பிட்டார். இதற்கிடையில் தென்னாபிரிக்காவில் அதிகளவான தமிழர்கள் உள்ளனர்.

அத்துடன் தென்னாபிரிக்காவின் தமிழரான நவநீதம்பிள்ளையே இலங்கை மீது சர்வதேச விசாரணையை கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்டார். அத்துடன தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டது.

எனவே, தென்னாபிரிக்கா இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்அவர்கூறினார் மேலும, தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழி ஒருபிரச்சினையாக இருக்குமா னால் வடக்கில் உள்ள சிங்கள வர்களுக்கு தமிழ் மொழிப் பிரச்சி னையாக உள்ளது.

வடக்கு மாகாணசபையின் தவிசாளர் சீ.வி.கே.சிவஞானம் தென்னிலங்கையின் சிங்கள கட்சிகளுக்கு தமிழ் மொழி மூலம் கடிதம் எழுதியமை கண்டிக்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார். எனவே தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியால் பிரச்சினை இருப்பதாக மாத்திரம் குற்றம் சுமத்துவது பொருத்த மற்றது என்று வர்ணசிங்க குறிப்பிட்டார். (2)



தனியார் பொதுப் போக்குவரத்துச் சேவையில் பயணிகளுக்கு டிக்கட்டுக்களை வழங்குவதற்கான இயந்திரங்களை கடனடிப்படையில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வடமராட்சி தனியார் பேருந்து உரிமையாளர் ஒரு வருக்கு டிக்கட் இயந்திரம் கையளிப்பதை படத்தில் காணலாம்.
(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# போலி நாணயத்தாள்களுடன் ஐவர் பொலிஸாரினால் கைது

போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை வைத்திருந்த ஐவர் வெள்ளவத்தை பகுதியில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 300 போலியான 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மற்றும் வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்களே போலி நாணயத்தாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 70 | 90 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 550 | 450 |
| தக்காளி | 200 | 220 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 60 |
| கோவா | 150 | 120 | 100 | 140 |
| கரட் | 200 | 160 | 180 | 200 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 50 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | 400 | 200 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 150 | 160 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | 100 | 100 |




விபு சன்




ஹரிடயான் அமிர்தலிங்கம்




லாவணியா துரைரத்தினம்




ஜெயரூபன் சிந்துஜன்




சஞ்சீவ் றோக்




தீபன் சற்குணம்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம சேத விபர மதிப்பீட்டின் அடிப்படையில் நட்டஈடு வழுங்கப்படும்

## பாராளுமன்றில் பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

**அளுத்கம, பேருவளை சம்பவங்களினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட செயலாளர்கள் ஊடாக நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் தி.மு.ஜயரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க 23/2 நிலையியல் கட்டளையின் கீழ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

அளுத்கம பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது ஜனாதிபதியோ பாதுகாப்பு செயலாளரோ நாட்டில் இருக்கவில்லை. ஆனால் அவர்களது ஆலோசனைப்படி சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்றும் நிலைமைகளைக் கட்டுப்படுத்த தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர்.

குறுகிய காலத்தினுள் நிலைமையை முற்றாகக் கட்டுப்படுத்தி பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பது தொடர்பில் இரு தரப்பு மதத் தலைவர்களையும் அழைத்து பேச்சு நடத்தப்பட்டது.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் அந்தப் பிரதேசங்களுக்குச் சென்று தேவையான ஆலோசனைகளை வழங்கினார். இனமத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மோதல்களினால் ஏற்பட்ட சொத்து மற்றும் உயிர்ச்சேதங்கள் குறித்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சம்பவங்களினால் மூவர் உயிரிழந்தனர். நான்கு வீடுகளும் இரண்டு கடைகளும் ஒரு 'தொழிற்சாலையும் முற்றாக சேதமடைந்துள்ளன.

ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறைந்த நட்டம் ஏற்பட்ட 125 வீடுகளும் அதனைவிட அதிக நட்டம் ஏற்பட்ட 71 வீடுகளும் 50 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த நட்டம் ஏற்பட்ட 35 வடுகளும் அதனை விடக் கூடுதலான நட்டம் ஏற்பட்ட 35 வீடுகளும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சேதமடைந்த கடைகள் மற்றும் வீடுகளை திருத்துவதற்காக இதுவரை 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பொருட்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்த விபரங்கள் கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகங்களின் ஊடாக உரிய நட்டஈடுகள் வழங்கப்படும். திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு முழுமையாக சேதமடைந்த கட்டடங்கள் அகற்றப்பட்டு முழுமையான திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

இதேவேளை பேருவளை அளுதகம ஆகிய இடங்களில் இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இன சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வினை மீளக் கட்டியெழுப்ப பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தரப்பினர் மற்றுமொரு தரப்பினருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடிய எவ்வித திட்டங்களையும் காணக்கிடைக்கவில்லை என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (2)

# நீதி தொடர்பில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

**ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு**

நாட்டின் நீதி தொடர்பில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். நாட்டில் சட்டம் ஒழுங்கு உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் சட்டம் ஒழுங்கு அனைவருக்கும் ஒரே விதமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு விதமாக அமுல்படுத்தப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் ஜனநாயகம் அழிவுப் பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் நாட்டின் காவல்துறையினரை அடக்கி ஆழ்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸார் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சேவையில் திறமையான நேர்மையான உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள் என்ற போதிலும் கடமையை உரிய முறையில் ஆற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியின் சில அரசியல்வாதிகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கொலை செய்து அவர்களின் காதலிகளை வன்புனர்விற்கு உட்படுத்தி வருகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். பெண்கள் பாலியல் ரீதியக துன்புறுத்தப்படுகின்ற போதிலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இலங்கைக்கான உதவித் திட்டங்களுக்கு இந்தியா 500 கோடி ரூபா ஒதுக்கீடு

இலங்கைக்கான உதவித் திட்டங்களை வழங்குவதற்கான இந்திய அரசாங்கம் தனது வரவு- செலவுத் திட்டத்தில் 500 கோடி இந்திய ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 2014-15 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை இந்திய நாடாளுமன்றில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி நேற்று முன்தினம் சமர்ப்பித்தார்.

இதில் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு 14, 730 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு உதவித் திட்டங்களை வழங்குவதற்காக 500 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேபோன்று நேபாளத்துக்கான உதவித்திட்டங்களுக்கு 450 கோடி ரூபாவும் பங்களாதேஷிற்கான உதவித்திட்டங்களுக்காக [illegible] கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி ஜெயக்குமார் ஷாமினி**

கொழும்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் ஷாமினி கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு St Marylebone Crematorium,East End Road, London N2 ORZ,UK என்னும் முகவரியில் நடைபெறும்.

**திருமதி பத்மநாதன் வனதலட்சுமி**



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Torontoஐ வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் வனதலட்சுமி கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham Ontario L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**கந்தையா கெங்காதரம்**

சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கெங்காதரம் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கச்சாய் எறியால் புட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**சண்முகராசா சாந்தகுமார்**



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bremen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சாந்தகுமார் கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு NordstraBe 5,28217 Bremen,Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



**கந்தர் செனகரட்ணம்**

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செனகரட்ணம் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham ONL3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**திருமதி நற்குணசிங்கம் சிவகுமாரி**



புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு அழுத் மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நற்குணசிங்கம் சிவகுமாரி கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமைபிற்பகல் ஒரு மணிக்கு விளையாட்டு அரங்கு வீதி,பருத்தியடைப்பு, கட்டப்பிராய் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தல் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்வியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**மடுத்தீன் போர்விலியப்பர்**

3 ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் போர்விலியப்பர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று காலை 9 மணிக்கு மண்டைதீவு புனித [illegible] ஆலயத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேட்டைக்காரனும் விநோத போட்டிகளும்

சைபீரியாவில் ஓர் அருவிக் கரையில் வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான்.



தன் பசியைப் போக்குவதற்கு மட்டுமே வேட்டையில் இறங்குவான்.

மற்றபடி எந்த விலங்கையும் தொந்தரவு செய்யமாட்டான்.

ஒருநாள் அவன் சதுப்பு நிலத்தில் சிக்கிக்கொண்ட மானைப் பார்த்தான்.

அதை அம்பு எய்து கொல்ல முற்பட்டான்.

அப்போது "என்னைக் கொல்லாதீர்கள்! என்னைக் கொல்லாதீர்கள்!" என்று மான் கெஞ்சியது.

அதைக் கேட்டு மனம் இளகிய அவன், அதைக் கொல்லவில்லை.

'மிகவும் நன்றி!

எப்போதாவது என் உதவி தேவைப்பட்டால் என்னைக் கூப்பிடு" என்று சொல்லிவிட்டு மரங்களுக்கு இடையில் மான் ஓடி மறைந்தது.

வேட்டைக்காரன் காட்டில தொடர்ந்து நடந்தான்.

சற்றுத் தொலைவில் கீழே விழுந்துகிடந்த மரக்கிளையின் அடியில் சிக்கிக்கொண்டு இருந்தது ஓர் எறும்பு.

'வேட்டைக்காரா... வேட்டைக்காரா... தயவுசெய்து என்னைக் காப்பாற்று" என்று மன்றாடியது எறும்பு.

அவன் அந்த மரக் கிளையை எடுத்து எறும்பை விடுவித்தான்.

அது நன்றி சொல்லிச் சென்றது.

சற்று நேரத்தில் ஆழம் குறைந்த ஒரு நீல ஏரியைச் சென்று அடைந்தான்.

அங்கே அழுகைக் குரல் கேட்டது.

கரையில் துள்ளி விழுந்து மீண்டும் தண்ணீருக்குச் செல்ல முடியாமல் தவித்த மீனின் குரல் தான் அது.

"வேட்டைக்காரா... தவறி விழுந்து இந்தக் கரையில் தவிக்கிறேன்.

என்னை எடுத்துத் தண்ணீருக்குள் போடேன்" என்று அழுதது.

அவன் அந்த மீனைத் தண்ணீரில் போட்டான்.

"மிகவும் நன்றி!



என் உதவி தேவைப்படும் போது கூப்பிடு" என்று சொல்லி விட்டுத் தண்ணீருக்குள் மறைந்தது.

சற்று நேரம் ஒய்வு எடுத்த பிறகு அவன் மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

இறுதியில் ஒரு கிராமத்தை அடைந்தான்.

அங்கே இருந்த ஒரு குடிசையின் வாசலில் ஓர் இளம்பெண் இருந்தாள்.

அவளைப் பார்த்ததுமே வேட்டைக்காரனுக்கு மிகவும் பிடித்து விட்டது.

குடிசைக்குள் சென்று அவள் அப்பாவிடம் தன்னைப் பற்றிய விவரங்களைச் சொல்லித் திருமணத்துக்குப் பெண் கேட்டான்.

அந்தப் பெண்ணின் தந்தை சொன்னார் "நான் உனக்கு மூன்று வேலைகள் தருகிறேன்.

நீ அந்த வேலைகளைத் திருப்திகரமாகச் செய்து முடித்தால் என் பெண்ணை உனக்கு மணம் செய்து தருகிறேன்.

இல்லை என்றால் நீ என் அடிமையாக வேண்டும்."

"நான் சம்மதிக்கிறேன்" என்றான் வேட்டைக்காரன்.

பெண்ணின் தந்தை "யார் அங்கே, என் இரும்பு ஷூக்களை எடுத்து வாருங்கள்" என்று குரல் கொடுத்தார்.

அவரது வேலைக்காரர்கள் சிரமப்பட்டு இரும்புக் காலணிகளைத் தள்ளிக்கொண்டு வந்தார்கள்.

"இந்த ஷூக்களை அணிந்து கொள். ஓர் இரவுக்கு ஷூக்களை நடந்து தேய்க்க வேண்டும். நீ அப்படிச் செய்த பிறகு இரண்டாவது வேலை கொடுக்கிறேன்" என்றார் அவர். வேட்டைக்காரன் ஷூக்களை அணிந்துகொண்டு புறப்பட்டான். அவனுக்கு மானின் நினைவு வந்தது................

(தொடரும்)

07.2014
12

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1641 - போர்த்துக்கல்லுக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1690 - இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியமின் படைகள் போயின் என்ற இடத்தில் இரண்டாம் ஜேம்சின் படைகளை வென்றனர்.
- 1691 - இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியமின் படைகள் அயர்லாந்தில் ஒகிறிம் என்ற இடத்தில் பெரும் வெற்றி பெற்றனர்.
- 1799 - ரஞ்சித் சிங் லாகூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பஞ்சாபின் ஆட்சியைப் பிடித்தான்.
- 1806 - 16 ஜேர்மன் மாநிலங்கள் புனித உரோமப் பேரரசிலிருந்து விலகி ரைன் கூட்டமைப்பு என்ற புதிய அரசை நிறுவினர்.
- 1898 - செனான் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 - நோர்வே வடக்கு கிறீன்லாந்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1975 - சாவோ டொமே மற்றும் பிரின்சிப்பி போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1979 - கிரிபட்டி பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2006 - ஷ்ரேலிய இராணுவத்தினர் இருவரை ஹிஸ்புல்லாக் இயக்கத்தினர் கடத்தினர். இதனை அடுத்து இஸ்ரேல் லெபனான் மீது தாக்கியதில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். போர் ஆகஸ்ட் 14 இல் முடிபுக்கு வந்தது.

### பிறப்புகள்

- கி.மு 100 - ஜூலியஸ் சீசர், ரோமானியத் தலைவன்
- 1854 - ஜோர்ஜ் ஈஸ்றமன், ஒளிப்படச்சுருளைக் கண்டுபிடித்தவர் (இ. 1932)
- 1904 - பாப்லோ நெருடா, நோபல் பரிசு பெற்ற சிலிக் கவிஞர் (இ. 1973)
- 1956 - நடிகர் பிரபு

### இறப்புகள்

- 1536 - எராஸ்முஸ், டச்சு எழுத்தாளர், மெய்யியலாளர், (பி. 1466)
- 2006 - உமர் தம்பி, தமிழ் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (பி. 1953)
- 2012 - மணி கிருஷ்ணசுவாமி, கர்நாடக இசை வாய்ப்பாட்டு கலைஞர் (பி. 1930)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"



03

...அவர் கிரிக்கெடி வீரர் இல்லை. எண்பதுகளின் தொடக்கத்தில் கொடி கட்டிப் பறந்த டென்னிஸ் சூப்பர் ஸ்டார் ஜான் மெக்கன்ரோ. சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஐந்து முறை விம்பிள்டன் சாம்பியனான ப்யான் போர்க்கை எதிர்த்து 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் இறுதிப் போட்டியில் களம் இளங்குகிறார் ஜான் மெக்கன்ரோ. உலகம் முழுவதும் அன்றைக்கு இந்தப் போட்டியை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தது. ஆறாம் முறையாக ப்யான் போர்க் விம்பிள்டன் சாம்பியன் ஆவார் 'என்பது தான் அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், சச்சின் மட்டும் மெக்கன்ரோவின் தீவிர ரசிகராக, போர்க்கை வீழ்த்தி அவருடைய தொடர் விம்பிள்டன் வெற்றிக்குத் தடைபோட வேண்டும் என்று விரும்பினான்.

சச்சின் எதிர்பார்த்த அதிசயம் நடந்தது. போர்க் அதிர்ச்சித் தோல்வி அடைய மெக்கன்ரோ ஒரு நாளில் சூப்பர் ஸ்டார் ஆனார். சச்சினும் கை மணிக்கட்டு மற்றும் நெற்றியில் பேண்ட் கட்டிக்கொண்டு ராக்கெட் மட்டையுடன் டென்னிஸ் விளையாடத் துவங்கினான். ஆனால், இறைவன் எழுதிய கணக்கு வேறாக இருந்தது. இந்திய கிரிக்கெட் செய்த புண்ணியம் டென்னிஸ் விளையாட்டை விட நாளடைவில் சச்சினுக்குக் கிரிக்கெட்டில்தான் ஆர்வம் மேலோங்கியது. இந்தியக் கிரிக்கெட் குழுவிற்கு ஒரு வைரம் கிடைத்தது.

மூன்று வயதிலேயே சச்சினுக்கு கிரிக்கெட்டின் மீது காதல் வரத்துவங்கியது. அந்தக் காதல் இன்றைக்கும் தொடர்கிறது. பூரிக் கட்டை, துணி துவைக்கும் கட்டை என எது கையில் கிடைத்தாலும் அதுதான் சச்சினுக்கு பேட். அதை வைத்துக்கொண்டு வீட்டிற்குள்ளேயே கிரிக்கெட் விளையாடி ஜன்னல் கண்ணாடிகளையும் ஷோகேஸ் கண்ணாடிகளையும் சச்சின் உடைத்தது தனிக்கதை.

பிஞ்சுக் குழந்தை நெஞ்சில் உதைத்தால் அந்தக் காலுக்குக் கொலுசு பூட்டி அழகு பார்க்கும் பெற்றோர்போல் சச்சின் செய்த ரகளையை



பெற்றோருடன் சச்சின்

எல்லோரும் ரசித்தனர். கொஞ்சம் வளர்ந்ததும் காலனியில் இருந்த மைதானத்தில டென்னிஸ் பந்தை வைத்துக்கொண்டு சக நண்பர்களுடன் சச்சின் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினான்.

சச்சின்விளையாடும்விதம்அவரதுஅண்ணன் அஜீத்திற்குப் பிடித்திருந்தது. சச்சின் யாருடைய ஸ்டைலையும் காப்பி அடிக்காமல் தனக்கென ஒரு பாணியை வளர்த்துக்கொண்டு வந்தான். சச்சினின் ஆதர்ஷ நாயகன்கள் கவாஸ்கரும் கபில்தேவும்தான்.

இதற்கும் காரணம் இருக்கிறது. 1983 ஆம் ஆண்டு புருடென்ஷியல் உலகக் கோப்பையை வென்று இந்தியா சாதனை படைத்ததை அவ்வளவு சீக்கிரம் யாராலும் மறக்க முடியாது. அதற்கு முன்பு நடைபெற்ற இரண்டு உலகக் கோப்பைகளை வென்றது வெஸ்ட் இண்டீஸ் அணி. ஆகவே, உலகம் முழுவதும் இருந்த கிரிக்கெட் ரசிகர்கள் மேற்கு இந்தியத் தீவுகள் அணிதான் மூன்றாவது முறையும் வெல்லும் என்று உறுதியாக நம்பினார்கள். ஆனால், நடந்ததோ வேறு. இந்திய அணி மேற்கு இந்தியத் தீவுகளை வாரிச் சுருட்டி தூக்கி எறிந்தது. உலகக் கோப்பையுடன் கபில் தனது அணியுடன் காணப்பட்ட புகைப்படம் இந்தியாவில் உள்ள அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளியானது. உண்மையிலேயே அது ஒரு மகத்தான சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரே இரவில் கபில்தேவ் உச்சத்திற்கு சென்றுவிட்டார்.

## மும்பை தந்த முத்து

தொடர்ந்து மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் கவாஸ்கர் முப்பதாவது சதம் அடித்து கிரிக்கெட் பீஷ்மர் என்று புகழப்பட்ட ஆஸ்திரேலியாவின் பிராட்மெனின் நாற்பது வருடச் சாதனையை முறியடித்தார்.

உலகத்திலேயே அதிக செஞ்சுரி அடித்த பெருமை கவாஸ்கரைச் சென்றடைந்தது. சச்சினின் ஹீரோக்களாக கவாஸ்கரும், கபிலும் உருவான கதை இதுதான்.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்திய- மேற்கு இந்தியத் தீவுகள் கிரிக்கெட் விளையாட்டிற்கு சச்சினை அவரது சகோதரர் அஜீத் அழைத்துக் கொண்டுபோனார். தனது கனவு நாயகர்கள் களம் இறங்கி விளையாடும் பாங்கைக் கண்டு சச்சினுக்கு ஏக சந்தோஷம். ஒவ்வொரு ரன்னுக்கும் கைதட்டி ஆரவாரித்து மகிழ்ந்தான். சரியான பாதையில் சென்று பயிற்சி கொடுத்தால் இதே வான்கடே மைதானத்தில் சச்சின் விளையாடும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை அஜீத் உணர்ந்து கொண்டார். அவர் அன்றைக்கு எடுத்த சரியான முடிவே இன்றைக்கு உலகம் போற்றும் சிறந்த கிரிக்கெட் விரரை நமக்கு வழங்கி உள்ளது எனில் அது மிகையில்லை.

(தொடரும்)

கே.ரமேஷ்

# உங்கள் பிறந்த எண் 05 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்

38

### தோற்றம்

புதனுடன் செவ்வாய் இணைந்து வழங்கும் ஆதிக்கப் பலன். உயரமும் அளவான பருமனும் கொண்டு வாட்டசாட்டமாக சிவப்பாகக் கம்பீரமாக காட்சிப்படுவர். உடல் உறுதியாக பலமுடன் இருக்கும். மூக்கு நீண்டு, ஒல்லியாக இருக்கும். அளவான நெற்றியுடன் முகம் சற்று நீளமாக அமைந்திருக்கும். வாய் சற்றுப் பெரிதாக இருக்கும். நீண்ட முடி அடர்ந்து இருக்கும். கண்கள் பெரிதாக அழகாகத் தோற்றம் இருக்கும். சிறுவயதில் ஒல்லியாக இருந்து வயதாக ஆகப் பருப்பர். பற்கள் சிறியவையானாலும் நீளமாக இருக்கும். அழகாக இருப்பார்.

### குணம்

மனத் துணிவும் புத்தித் தந்திரமும் உள்ளவர்கள். உடலும் பெரிதாக இல்லாவிட்டாலும் உறுதியாக இருக்கும். ஆபத்துக்குத் துணிந்த சாகசங்களைச் செய்வர். முகத்துதி செய்தால் எதையும் செய்வர். சக்திக்கு மீறிய வேலைகளிலும் தலையிட்டு சங்கடப்படுவர். சாமர்த்தியமாக ஏதாவது கூறிச் சமாளித்து விடுவர். ஒப்பந்தம் செய்துகொண்டும் பிறர் வேலைகளை முடிப்பர். பொது சேவைகளிலும் ஈடுபடுவர்.

மக்கள் செல்வாக்கும் இவர்களுக்கு இருக்கும். பலரறிய ஏமாற்றுதலைச் செய்யார். தக்க காரணம் இருந்தால் வம்பு தும்புகளைச் செய்வர். வழக்குப்போடுவர். பிறருக்காகவும் வழக்குப் போடுவர். கட்டப் பஞ்சாயத்தும் செய்வர். நியாயம், பொது நன்மைக்காகவும் போராடுவர். குரூர மனம்கூட இருக்கும். தம்முடன் மோதுபவருக்குப் பெரும் சேதம் உண்டாக்கி வெல்லுவர். சாத்திர அறிவும், வீரமும், உடல் சக்தியும் இருக்கும். இவர்களுக்கு விரோதிகளும் உண்டாவர். இவர்களுடைய புகழும் பிரபலமும் பிறருக்குப் பொறாமையை ஏற்படுத்திப் பகையை வளர்க்கும்.

இவர்களுக்கு உண்டாகும் சிக்கல்களைத் தமக்குத் தாமே தீர்த்துக்கொள்ளவே நினைப்பர். பிறரிடம் கூறி பகிர்ந்து கொள்ளுவதோ, உதவிக் கழைப்பதோ தம்மைப் பிறர் குறையாக நினைக்கும்படி செய்யும் என்றே எண்ணுவர். இது சில பிரச்சினைகளை இவர்கள் தனியாகச் சமாளிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும்.

பகையும் வம்பும் பிரச்சினையும் அடிக்கடி இவருக்கு உண்டாகும். அதோடு காயப்படுதல்கூட உண்டு. நம்பக் கூடிய இவர்களுக்கு உடல் சிரமம் இருக்கும். மன உறுதியும் திறமையும் பிறரைப் புரிந்து நடக்கும் தன்மையும் இவர்களை ஹீரோக்களாக்கும்.

### குடும்பம்

அதிகம் அலட்டிக் கொள்ளாமல் தூக்கம், அரட்டை என்று விளையாட்டும் படிப்புமாக முற்பகுதி வாழ்க்கை செல்லும். காதல் பிறக்கும். நண்பர்களும் நண்பிகளும் சேர்ந்திருப்பர். கண்டதும் காதலும் காதலில் தந்திரமும் வம்பும் உண்டாகும். திருமணமும் நடக்கும். ஏதோ ஒரு வேலை அல்லது சொந்தத் தொழில் சம்பாதனை வரும். அதைக் கொண்டு குடும்பம் நன்றாக மகிழ்வுடன் நடக்கும். ஆனால் இவர்களுடைய முரட்டுக் குணத்தால் பிரச்சினைகளும் முளைக்கும். கொஞ்சம் போராட்டமாகவும் இருக்கும். அமைதிக் குறைவு உண்டாகும். ஆபத்து, விபத்திலிருந்தும் தப்பிப்பர். மனைவி கணவனை, கணவன் மனைவியைப் பிரிவதோ வழங்குண்டாவதோ நிகழும். உயிரையும் இழக்க நேரலாம்.

### தொழில்

துணிவும் வேலை செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வமும் இவர்களுக்கு அதிகம். கவர்ச்சியும் சுறுசுறுப்பும் உள்ளவர் என்பதால் வேலை எளிதில் கிடைக்கும். சொந்தத் தொழில் செய்யவும் பிரியம் எழும். உடலிலும் சக்தி இருக்குமாதலால் உழைப்பர். பொருள் ஈட்டுவர். எச்சூழ்நிலையிலும் போட்டி போட்டு எதிர் நீச்சலடிப்பார். கட்டட வேலைக் காரர் ஆவர்



கலை ஈடுபாடும் இருக்கும். பாட்டு, நடனம், எழுத்து என முயலுவர். ஓவியராகலாம். டிசைனராகலாம். மிகவும் பொருத்தமானது சிவில் என்ஜீனியர் படிப்பும் வேலையும். பூமிபற்றி, நீர் இருப்பது பற்றி ஆராய்வதும் செய்வர். ரியல்எஸ்டேஸ் வேலை -தொழிலில் பணம் பண்ணலாம். வக்கீல், மருத்துவர்,அறுவை நிபுணர், பொலீஸ், இரா ணுவம் பதவிகளும் பொருத்தமே. மோட் டார் இயந்திரம், ஆயுதத் தொழிற் சாலை களில் பணி புரியலாம் பத்திரிகை, நாடகம் பொருத்தமான "துறைகள். மதகுருமார், அரசியல்வாதிகளாக, மனதத்துவ மருத்து வராகலாம். தரகராக, ராஜதந்திரிகளாக, சரித்திர கதாசிரியராக இருக்கும் திறமை உள்ளவர்.

### நோய்

ஜுரம், ரத்த அழுத்தம், ரத்தக்கட்டி, மஞ்சள் காமலை, வயிற்றுவலி, மூலம் வரலாம். கை, கால், முதுகு, கழுத்து வலிகள், வாயுத் தொல்லை, இதயக் கோளாறு முதலியவை உண்டகலாம். கண்ணில், சிறுகுடலில், அறுவைச் சிகிச்சை ஏற்படலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையோரக்காணிகள் சுவீகரிப்பு

# நிறுத்தப்பட்டு உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள்

### டி.எம்.சுவாமிநாதன் எம்.பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்குச் சொந்தமான யாழ். கரையோரப் பகுதி காணிகளை பாதுகாப்புப் பிரிவினரின் தேவைகளுக்காக சுவீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு அக் காணிகளை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கீரிமலை, சேந்தாங்குளம், திருவடிநிலை போன்ற பிரதேசங்களில் 130 ஏக்கர் கரையோரக் காணிகளை படைத்தரப்பினரால் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதனால் பல குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதுடன் அவர்கள் பெரும் வாழ்வாதாரப் பிரச்சினையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பிரதேச மதத்தலைவர்களினதும் பிரதேச வாசிகளினதும் பாரிய எதிர்ப்பிற்கு மத்தியிலும் இவ்வாறு காணிகளை சுவீகரிப்பது சிறுபான்மை மக்களை மேலும் நசுக்கும் செயலாகும்.

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கழிந்துள்ள இச்சந்தர்ப்பத்திலும் வடக்கில் பாதுகாப்பை விஸ்தரிப்பதற்கு/மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளினால் மக்கள் பெரும் அச்சத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும், வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலும் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் இது வரைக்கும் இது சம்பந்தமாக எதுவித பெறுபேறுகளும் கிடைக்கவில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயக விரோத செயற்பாடுகளாகும். சர்வதேச மட்டத்தில் இந்த அரசாங்கத்திற்கு எதிராக அழுத்தங்களுக்கு மேல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பத்திலும் சட்ட விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவது கவலையான விடயமாகும்.

சிறுபான்மை மக்களை பாதுகாப்பதிலிருந்தும் இந்த அரசாங்கம் வழி தவறியே செயற்படுகின்றது என்பது தெளிவான விடயமாகும்.

யாழ். அச்சுவேலி, நுணாவில் போன்ற பகுதிகளிலும் இராணுவத் தேவைகளுக்காக காணிகள் சுவீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

அதுமாத்திரமன்றி யுத்தத்தின் பின்னரான 5 வருடக் காலப்பகுதியில் கிழக்கிலும் பாரியளவில் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மட்டு. மாவட்டத்தில் இதுவரைக்கும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் காணி பாதுகாப்பு தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

சிறுபான்மை மக்களின், குறிப்பாக தமிழ் மக்களின் காணிகள் ஏன் இவ்வாறு சுவீகரிப்பட்டு, பாதுபாப்பு விஸ்தரிக்கப்படுகின்றது என்பது புரியாத விடயமாகும். அவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தையும் அசசத்தையும் தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை கைவிட்டு தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த நிலப்பரப்புகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் மீது இவ்வாறு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளபடும் கெடுபிடிகளை நிறுத்தி நாட்டின் கீர்த்தியை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். (2-6)

# 153 புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்து எவ்வித கருத்துக்களையும் கூறமுடியாது

### அவுஸ். வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

ஆட்கடத்தல் செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் வகையிலான எந்தவொரு தகவலையும் வெளியிடாமையினால் தமது முயற்சி வெற்றி பெற்றுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவிக்கின்றார்.

153 புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தம்மால் கூற முடியாது என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தமிழோசைக்கு தெரிவித்துள்ளார்.

தமது பொறுப்பில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் 153 பேரையும் மீண்டும் திருப்பி அனுப்பும் நோக்கம் அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு இல்லை என அந்த நாட்டு ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த விவகாரம் அந்த நாட்டின் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 37 சிறுவர்கள் உள்ளிட்ட 153 புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆழ்கடலில் உள்ள அவுஸ்திரேலியாவின் சுங்க படகொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டதாக அந்த ஊடக செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாட்டிலிருந்து சட்டவிரோதமாக புகலிடம் கோரி வேறு நாடுகளுக்கு மக்கள் செல்வதற்கான எவ்வித தேவையும் இல்லை என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் ஜயந்த பெரேரா கூறியுள்ளார்.

இலங்கை தற்போது அபிவிருத்தி அடைந்துள்ளது. இலங்கையில் வாழமுடியும் என்பதனை அவுஸ்திரேலிய பிரதமர் கூட அண்மையில் கூறியிருந்தார். அதன் காரணமாகவே அங்கு சென்ற 41 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பாதுகாப்பாக வாழ முடியும் என்பதனை அவரகள் கூறியுள்ளனர். எனவே நாட்டின் தற்போதைய நிலைமையை பலரும் அறிந்துள்ளனர். ஆகவே புகலிடம் கோரி வேறு நாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்தார். (2)

# மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமை நாட்டில் முடக்கம்

### பாலித ரங்கே பண்டார எம்.பி

(கொழும்பு)

மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய உரிமை இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பயங்கரவாதம் இல்லாமல் செய்யப்பட்டதன் மூலம் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய உரிமை முடக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு விரும்பிய மதத்தை வழிபாடு செய்யும் உரிமைக்கு சவால் ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் இன்று அரசியல் வாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படுகின்றனர்.

பொலிஸார், அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சித்தால் பல்வேறு அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும்.

இன மதவாதத்தை தூண்டும் நோக்கில் நாட்டில் சில சக்திகள் இயங்கி வருகின்றன. [illegible] இந்த அமைப்புக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2)

## அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் பொன்.நிறமான கைச்சங்கிலி ஒன்றும் மோதிரம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு வைத்திய சாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் [illegible] ராஜா அறிவித்துள்ளார். (2)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று தீர்த்தத் திருவிழா

### நானிலம் போற்றும் நாயகியே

அலை கடல் நடுவே இருந்து
அழகாக எம்மை வழி நடத்தி
அகிலத்தின் நாயகியாக வீற்றிருக்கும் எம்மவளே
நாயகியே உம்தாளை நாமும் தொழுகின்றோம்
இன்று தீர்த்த கரையில் நின்று
உம் அருளைத் தந்தருள்க

காரை S.K. ஜனகன் (காரைநகர்)

### நயினைத் தாயே...

அலைகடல் மத்தியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும்
ஆதிஅந்தம் அற்றவளேதீர்த்தமாடு
இனமத பேதமற மனமுருகி தீர்த்தமாடு
ஈடுஇணை அற்றவளே தீர்த்தமாடு
ஓங்கார நாயகியே தீர்த்தமாடு

திருமதி திலகா சண்முகம்
(உடுவில் மகளிர் கல்லூரி, ஆசிரியர்)

### நயினை நாகபூஷணியே சரணம் அம்மா

நயினை அம்மனே நாகபூஷணியே சரணம் அம்மா
நலம் தருபவளே நாகபூஷணியே சரணம் அம்மா
வரம் தரும் தீர்த்த நாளில் வணங்குகிறோம் அம்மா
வரம் தரும் தாயே சரணம் சரணம் அம்மா

கு.யசிதீபன் (அரியாலையூர்)

### அலை கடலோர நாயகியே

நயினையிலே நாகபூஷணிக்கின்று தீர்த்தம்
நம்துயர்கள் மட்டும் இங்கு என்று தீரும்
தீராத மத வெறியில் படுதுயர் களைந்தே
அலை கடலோர நாயகியே அருளைத்தா அம்மா

வேல்நந்தன் (புலோலியூர்)

### எமக்கு அருள் புரிவாய்

நாகம் குடை பிடித்து தீர்த்தமாடு
தெய்வமான நீ எங்கள் தாயும் நீ
மங்கையர் மனதில் குடிகொண்ட நீ
இன்று தீர்த்தமாடி அருள் புரிவாய் நீ

வே.சிவகணேஷ்
(யா/உரும்பிராய் சை.த.வி)

### மணி பல்லவத்தில் பிணிதீர்க்க தீர்த்தமாடு

நலம் தரும் நாகபூஷணியே தீர்த்தமாடி அருள்வாய்
நாடும் வரம் தருபவளே தீர்த்தமாடி அருள்வாய்
நிலம் படும் துயர் தீர்க்க தீர்த்தமாடி அருள்வாய்
வாஞ்சையுடன் உனைப்பணிய தீர்த்தமாடி அருள்வாய்

கலா மதுரத் தமிழ்

### வாழ்வாங்கு வாழ தீர்த்தமாடு

கடலலைகள் கீதமிடும் நயினையிலே
கச்சிதமாய் வீற்றிருந்து தீர்த்தமாடு
கருணையுடன் எமையெல்லாம் காத்திட தீர்த்தமாடு
காணவந்த அடியார்க்குதவிட தீர்த்தமாடு

வ.செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(C-7745)


# அவுஸ்திரேலியாவின் தீர்மானம் ஒரு சிறந்த நடவடிக்கை

## கடற்படை தளபதி தெரிவிப்பு

தஞ்சம் கோரி செல்பவர்களின் படகுகளை திருப்பி அனுப்புவது என்ற அவுஸ்திரேலியாவின் தீர்மானம் ஒரு சிறந்த நடவடிக்கை என இலங்கையின் புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா, கண்டியில் மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

படகுகள் மூலம் சென்று அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் பெரும்பாலான நபர்கள் அரசியல் காரணங்களுக்காக தஞ்சம் கோரவில்லை எனவும் பொருளாதார காரணங்களுக்காக அவர்கள் அங்கு செல்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

படகு மூலமான சட்டவிரோத பயணங்கள் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு சென்று தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையில் நிலைமைகள் மாறி விட்டன. இதனால் எவரும் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் பெற வேண்டிய தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்லும் சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுத்து நிறுத்த கடற்படையினர் மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் கடற்படை தளபதி மாநாயக்க தேரர்களுக்கு விளக்கியுள்ளார்.

படகுகளில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்பவர்களை தடுத்து நிறுத்த கடற்படை படகுகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் நபர்கள் பற்றிய புலனாய்வு தகவல்கள் அவர்கள் படகு பயணத்தை தொடங்கு முன்னரே கிடைத்தும் வருகின்றன எனவும் கடற்படை தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (2)


## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

### சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் சுத்திகரிப்பு சேவைக்கான வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் உள்ள சகல மலசல கூடங்களையும் சுற்றுப் புறங்களையும் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால்களையும் துப்புரவு செய்வதற்கான கேள்விகள் பொருத்தமான சேவை வழங்குநர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் செயலக நிர்வாகக் கிளையில் (தொ.பே.இல:- 0212285357, பக்ஸ் இல:- 0212283966) 14.07.2014 ஆம் திகதியில் இருந்து 23.07.2014 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா ஆயிரமும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக் கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கிளிநொச்சி மாவட்ட சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல்**– 2014 என குறிப்பிட்டு 23.07.2014 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக செயலக நிர்வாக கிளையில் கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும். கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-7900)



## யாழ் கலாலயா

பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**



**மகளிருக்கான துரித 1 மாத கால பயிற்சிகள்** வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வந்திருப்பவர்களுக்கும் விரைவில் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும் உகந்ததொரு பயிற்சிநெறி.

கேக் ஐசிங் உணவு தயாரித்தல் கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும், Facials உடன் மணப் பெண் அலங்காரம், பலவித சேலை அணியும் முறைகள், Saree (B)பிளவ்ஸ் தைத்தல் ஆகிய பயிற்சிகள்.

**ஆரம்பம்:- 14.07.2014 திங்கட்கிழமை காலை 9.30**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

(சி.7838)

- இயக்குநர் -


# ஓராண்டு நினைவஞ்சலி

**பிறப்பு** 1958.04.03 **இறப்பு** 2013.07.12



## அமரர் கணபதிப்பிள்ளை மனோகரன் (புதுக்கவி)

**(யாழ். சக்கோட்டை மகா வித்தியாலய ஆங்கில ஆசிரியர்)**

**திதி-02.07.2014**

இரவு நீ எனில் நிலவு நான் என்றாய்
தென்றல் நீ எனில் பூ வாசம் நான் என்றாய்
பொங்கும் கடலிலே தங்கப் படகுகள்
நாம் என்றும் பிரியாத இளம் குயில்கள்
என்றெல்லாம் சொன்னவன் நீ
நேற்று வந்த காலனோடு
நெடும் தூரம் ஏன் சென்றாய்

**கலட்டி கரணவாய் கிழக்கு கரவெட்டி**

தகவல்:- மனைவி-இளவரசி,
பிள்ளைகள்:-ரவிவர்மன், சங்கர், வதைசாந்தி, அபிமஞ்சு, ஆதித்யா.

(6869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத பாரதம் இதுதானா?

கடந்த 46 ஆண்டுகாலமாகக் காவிரிப் பிரச்சினையில் ஒவ்வொரு முறையும் தமிழகம் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு இயற்கை நீதியை நிலைநிறுத்தப் போராட வேண்டியிருந்தது. நடுவர்மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளைக் கர்நாடகம் அலட்சியம் செய்தபோது அதைக் கண்டிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ மத்திய அரசு முன்வரவில்லை.

நடுவர்மன்றம் அமைப்பதிலிருந்து அதனுடைய இறுதித் தீர்ப்பை கெசட்டில் வெளியிடுவதுவரை ஏழு முறைகளுக்கு மேல் உச்சநீதிமன்றத்தின் படிகளில் தமிழகம் ஏறி ஏறி இறங்கிக் களைத்தது.

2007ஆம் ஆண்டு ஜனவரியில் நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பை அளித்தது. சட்டப்படி அதை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், அதை மத்திய அரசு வெளியிடவில்லை. மீண்டும் 2012 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தலையிட்டு ஆணை பிறப்பித்த பிறகே அரசிதழில் அத்தீர்ப்பு வெளியிடப்பட்டது. பன்மாநில நதிநீர்ப் பிரச்சினைச் சட்டத்தின் 6ஆவது பிரிவின்படி அரசிதழில் நடுவர்மன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்டவுடன், அது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்தையும் கட்டுப் படுத்தும். உடனடியாக அத்தீர்ப்பை நிறைவேற்றவேண்டிய கடமை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்திற்கும் உண்டு எனத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தீர்ப்பைச் செயற்படுத்துவதற்காக 1956-ஆம் ஆண்டு நதிநீர் வாரியச் சட்டத்தின்படிக் காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

காவிரிப் பிரச்சனை உருவான 46 ஆண்டு காலத்தில் பதவியிலிருந்த 9 பிரதமர்கள் காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் செயலற்று இருந்தார்கள். உச்சநீதி மன்றம் 7 முறை தலையிட்டுத் தீர்ப்புகளை வழங்கிய பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் இன்னமும் அமைக்கப்படவிலலை.

நடுவர்மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளை கர்நாடகம் கொஞ்சமும் மதிக்கவில்லை. இன்னமும் மதிக்கத் தயாராக இல்லை என்பதை அம்மாநிலத்தைச் சேர்ந்த பல தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. முன்னாள் முதலமைச்சரான எடியூரப்பா, மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஒரு போதும் கர்நாடகத்திற்கு எதிராகச் செயற்படாது. ஏனென்றால், தென்னிந்தியாவில் பா.ஜ.க.வை முதன்முறையாக முதல்வர் அரியணையில் அமரவைத்து அழகு பார்ததவர்கள் கர்நாடக மக்கள். இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. விற்கு 17 இடங்களை அம்மக்கள் அளித்துள்ளனர். பா.ஜ.க.வை நம்பி வாக்களித்த கர்நாடக மக்களுக்கு அநீதி இழைக்க விட மாட்டோம்." என்று கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமரான தேவகவுடா, "அரசியல் சுயலாபத்திற்காகக் காவிரி மேலாண்மை வாரியத்தை மோடி அமைத்தால் கர்நாடகத்தில் பெரும் எதிர்ப்பு உருவாகும்" என எச்சரித்தார்.

கர்நாடக முதல்வரான சித்தராமையா, "காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுப்போம். அப்படி அமைக்கப்படுவது கர்நாடகத்திற்கு இழைக்கப்படுகிற மிகப் பெரிய அநீதியாகும்." என்று கூறியுள்ளார்.

மத்திய இரசாயனத்துறை அமைச்சர் அனந்தகுமார் "கர்நாடகத்தின் நிலம், நீர், மொழி விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி கர்நாடகத்திற்கு அநீதி இழைக்க மாட்டார். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசி டம் இல்லை" எனத் திட்டவட்டமாக அறிவித் திருக்கிறார்.

இத்துடன் அவர்கள் நிற்கவில்லை. 10-6-2014 அன்று பிரதமர் மோடியை, கர் நாடக முதல்வர் சித்தராமையா தலைமை யில் அம்மாநிலத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் சந்தி த்தனர். முன்னாள் பிரதமர் தேவகவுடா, முன்னாள் முதலமைச்சர்கள் பி.எஸ்.எடி யூரப்பா, ஜெகதீஷ் ஷெட்டர், ஹெச்.டி. குமார சாமி, எம். வீரப்பமொய்லி ஆகியோரும் கர் நாடக மாநிலத்தைச் சேர்ந்த அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்குழுவில் அங்கம் வகித்தனர். ஆனால், இந்தக் குழுவில் மத்திய அமைச்சர்கள் வெங்கய்ய நாயுடு, அனந்தகுமார், சதானந்தகவுடா, ஜி.என்.சித்தேஸ்வர் ஆகியோரும் அங்கம் வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அமைச்சர்கள் எந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்தியா முழுமைக்கும் பொதுவானவர்களாகவும், மாநிலங்களுக்கிடையே வேறுபாடு காட்டாமல் நடுநிலையோடும் நேர்மையோடும் தங்களின் பதவிப்பொறுப்பை வகிக்க வேண்டும். இந்த உன்னதமான மரபைக் கர்நாடகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அப்பட்டமாக மீறிக் காவிரிப் பிரச்சினையில் ஒருதலைப்பட்சமாகவும் உச்சநீதிமன்றம், நடுவர்மன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளை மதிக்காமலும் அவற்றை பிரதமர் செயற்படுத்தக்கூடாது என்றும் வற்புறுத்தியுள்ளார்கள். இதன்மூலம எந்த அரசியல் சட்டத்தின்மீது ஆணையிட்டுப் பதவியை ஏற்றிருக்கிறார்களோ அந்த அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறியிருக்கிறார்கள.



தங்கள் மாநிலமான கர்நாடகத்திற்கு ஆதரவாக நடந்துகொள்ள இவர்கள் முடிவு செய்யுமுன் மத்திய அமைச்சர் பதவிகளை விட்டு விலகி அவ்வாறு செய்திருக்க வேண்டும். மத்திய அமைச்சர் பதவியிலிருந்து கொண்டே பிரதமரைச் சந்தித்து நெருக்குதல் கொடுப்பது என்பது நேர்மையற்றதாகும். கர்நாடகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் தம்மைச் சந்திப்பதற்குப் பிரதமர் அனுமதித்ததில் தவறு இல்லை. ஆனால், தம்முடைய அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் காவிரிப் பிரச்சினை தொடர்பாகத் தமிழகத்திற்கு எதிராகவும் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கெதிராகவும் செயற்படும்படித் தம்மைத் தூண்டுவதற்கு அனுமதித்திருக்கக்கூடாது. இந்நிகழ்ச்சி, பிரதமரின் நேர்மையில் தமிழக மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

தமிழகத்திற்கு அநீதி இழைப்பதில் கர்நாடகத்தோடு கேரளமும் போட்டி போடுகிறது. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் 34 ஆண்டுக் காலத்திற்கும் மேலாகத் தமிழகம் உச்சநீதிமன்றத்தில் போராடித் திட்டவட்டமான தீர்ப்பினைப் பெற்றிருக்கிறது.

பெரியாறு அணை வலிமையாக இருக்கிறது. எனவே அணையின் நீர்மட்டத்தை 142 அடி உயர்த்தலாம் எனக் கடந்த 7-5-2014 அன்று உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு தீர்ப்பளித்தாகிவிட்டது. மேலும் அத் தீர்ப்பில் "பெரியாறு நீர், தங்கள் மாநிலத் திற்குள் ஓடும் நீர் என்ற கேரள அரசின் வாதம் தவறானது. முல்லைப் பெரியாறு நதி கேரளத் தில் ஓடினாலும் தமிழகத்தின் வழியே 114 ச.கி.மீட்டர் பரப்பளவுக்கு வந்து செல்வதால் இரு மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியாகும். இந்நதிமீது கேரளம் மட்டும் உரிமை கொண்டாட முடியாது. தமிழகத்திற்கும் சம உரிமை உள்ளது என்றும், புதிய அணை கட்ட வேண்டும் என்ற கேரளத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்தும், பெரியாறு நீரின் மீது உரிமை கொண்டாடிய கேரளம் நிறைவேற்றிய சட்டம் செல்லாது என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆனால் இன்னும் அணை பலவீனமாக இருக்கிறது. எனவே நீர்மட்டத்தை உயர்த்தினால் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட கேரள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற பொய்யையே திரும்பத் திரும்பக் கேரள அரசியல் வாதிகள் கூறி வருகிறார்கள். மத்திய அரசு அமைத்த 6இற்கும் மேற்பட்ட நிபுணர் குழுக்கள் அணையைப் பரிசோதனை செய்து அணை பலமாக இருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றன. ஆனாலும் மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க 10 கோடி ரூபாய்க்கும் மேல் செலவுசெய்து அணையைத் தமிழக அரசு மேலும் பலப்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றம் அமைத்த நீதியரசர கே.டி.தோமஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு, நிபுணர் குழுவின் ஆலோசனையை ஆராய்ந்து பெற்றும் அணைக்கு நேரிடையாகச் சென்று பார்வையிட்டும் அணை வலிமையாக இருப்பதை உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. அதற்குப்பின்னர் உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியது. மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழுவிற்குத் தலைமை தாங்கிய கே.டி.தோமஸ் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், அவர் கேரள மக்களுக குத் துரோகம் செய்துவிட்டதாகக் கேரள அரசியல்வாதிகள் இழிவாகச் சாடினார்கள்.

9-6-14 அன்று கேரள சட்டசபை கூடிப் பழைய பல்லவியையே பாடிப் புதிய அணை கட்டவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும் கேரள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்ச உணர்வு தொடர்பாக விதி 143 இன் கீழ் உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் விளக்கம் கேட்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த விவகாரத்தை அதிக நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற பிரிவு விசாரிக்க வேண்டும் என்றும் கேரள முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன் கூறியுள்ளார்.

ஏற்கனவே உச்சநீதிமன்றம் நீர்மட்டத்தை உயர்த்தலாம் என்று கூறியபோது அரசியல் சட்டப் பிரிவுதான் இதை விசாரிக்க வேண்டும் என்று கேரளம் முறையிட்டு அதன்படி அரசியல் சட்டப்பிரிவு அமைக்கப்பட்டு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று தீர்ப்பு வழங்கிய பிறகு மீண்டும் வேறொரு பிரிவு அமைக்கப்பட வேண்டும் எனக் கேரளம் கூறி இன்னும் பல ஆண்டுகளுக்கு இவ்வழகை இழுத்தடிக்க முயலுகிறது.

பெரியாற்று நீரில் கேரளத்தின் தேவை போக வீணாகக் கடலில் கலக்கும் நீரின் அளவு 2313 மி.க. மீட்டர் ஆகும். இதில் நாம் கேட்பது அதாவது அணையின் நீர் மட்டம் 142 அடி உயரமாக இருந்தால் 217.10 மி.க. மீட்டர் ஆகும்

கடலில் கல்க்கும் நீரில் ஒரு சிறு பகுதியை மட்டுமே தமிழகம் பயன்படுத்துகிறது. அதைக் கூடத் தமிழகத்திற்கு அளிக்க மனமில்லாமல் கேரளம் நடந்துகொள்கிறது.

கர்நாடகத்திலும் கேரளத்திலும் உள்ள காங்கிரஸ் கட்சி தமிழகத்திற்கு எதிராக இழைத்துவரும் அநீதியின் விளைவாகத் தான் தமிழகத்தில் காங்கிரஸ் அடையாளம் தெரியாமல் துடைத்தெறியப்பட்டிருக்கிறது. இது தொடருமேயானால் மற்ற அகில இந்தியக் கட்சிகளுக்கும் தமிழகத்தில் காங்கிரசுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்.

49 ஆண்டுக் காலமாகக் காவிரிப் பாசன விவசாயிகளும், 30 ஆண்டு காலத்திற்கும் மேலாக முல்லைப் பெரியாறு பாசன விவசாயிகளும் தமிழக அரசும் நடுவர்மன்றம், உச்ச நீதி மன்றம் ஆகியவற்றில் முறையிட்டுப் போராடி நீதியை நிலைநிறுத்திய பிறகும் அவர்களுக்கு இயற்கை நீதிப்படியும், சட்டப்படியும் உரிமையான தண்ணீரைத் தர மறுத்துக் கர்நாடகமும், கேரளமும் அழிச்சாட்டியம் செய்துவருவதைப் பார்த்துத் தமிழக விவசாயிகள் கண்ணீர் மல்கக் குமுறலோடு கேட்கும் கேள்வி "ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்பது இதுதானா?"

-பழ.நெடுமாறான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் என்னை கொலை செய்ய திட்டமிட்டு வருகிறது

## தேசிய ஐக்கிய முன்னணி தலைவர்

**அரசாங்கம் தனது பயன்பாட்டுக்காக உருவாக்கிய காவி போர்த்திய நபர் அரசாங்கத்தை முந்திச் சென்றுள்ளதாகவும் பண்டார நாயக்கவுக்கு நேர்ந்த கதியே ராஜபக்ஷவுக்கும் நேரும் எனவும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் கூறுவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், காவி அணிந்த ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க உயிரிழந்தார் என்பதை நினைவூட்டுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்திற்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அப சரணம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன என்பது இதுவரை தெரியவில்லை என்பதால், ஞானசாரர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

அப சரணம் என்றால் அழிவு என்பதாகும் என தொலைக்காட்சி ஒன்று வெளியிட்ட தகவல் மூலம் தெரியவந்துள்ளது. மாடுகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கும் அபசரணம் என்றே கூறுவார்கள்.

இதனால் மத தலைவர் ஒருவர் அப சரணம் என்று கூறுவதை தகுதியானது அல்ல என பௌத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர், அனுர சேனாநாயக்க, அரசாங்கத்தின் செயலாளர்கள் இந்த செய்தியை அறியவில்லை என்பதன் காரணமாக ஞானசார கைது செய்யப்படுவது தாமதமாகியுள்ளது. நாட்டை அழிக்க வந்துள்ள நபரை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டுமா என்பது குறித்து அரசாங்கம் கேள்வி எழுப்ப வேண்டும். அரசாங்கத்திடம் இருந்து மக்களுக்கு கிடைக்கும் பிரயோசனம் பற்றி தேடிப் பார்க்க வேண்டும்.

சிறிய கருத்துக்களை வெளியிட எங்களையும் தமிழர்களையும் கைது செய்த அரசாங்கத்திற்கு பாரதூரமான கருத்தை வெளியிட்ட ஞானசாரவை ஏன் கைது செய்யவில்லை?.

எமக்கு எந்த இனவாத மோதல்களை ஏற்படுத்தும் தேவையில்லை. நான் அப்படி செய்திருந்தால் என்னை கைது செய்ய அரசாங்கத்திற்கு எந்த தடையுமில்லை.

அளுத்கம சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுமாறே நாங்கள் கோருகிறோம்.

நாங்கள் வழங்கிய கடிதத்திற்கு அரசாங்கம் பதில் நடவடிக்கை எடுத்திருந்தால், பிரச்சினை இந்தளவு தூரத்திற்கு சென்றிருக்காது.

பொலிஸ்மா அதிபருக்கு நாங்கள் கடிதம் வழங்கினோம். அசாத் சாலி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் வழங்கியதன் காரணமாவே மோதல் ஏற்பட்டதாக ஜனாதிபதி கூறியுளளார். அரசாங்கம் என்னை கொலை செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் திட்டமிட்டு வருகிறது. இதற்கு ரணகல பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார். (2)

# நாட்டில் பரீட்சையை மையப்படுத்திய கல்விமுறைமையே காணப்படுகிறது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



நாட்டின் பெற்றோர் மூன்று பரீட்சைகளை வழிபாடு செய்து வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மாதம்பே சேனாநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடினமானவர்களை மென்மையாக்கும் ஓர் சக்தியாக பரீட்சைகள் மாற்றமடைந்துள்ளன.

தாயும் தந்தையும், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய பரீட்சைகளை வழிபாடு செய்கின்றனர். பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமையே நாட்டில் காணப்படுகின்றது.

கணித பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியெய்தாவிடின் உயர்தரத்திற்கு பிரவேசிக்க முடியாது என கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்தது.

இவ்வாறு ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் மாணவ மாணவியர் கணித பாடத்தில் சித்தியடையாது உயர்தரத்தை கற்க முடியாமல் வீட்டுக்கு செல்ல நேரிடுகின்றது.

கணித பாடத்தில் சித்தியெய்தாத மாணவ மாணவியர் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே அவ்வாறான மாணவ மாணவியருக்கு உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்க ஓர் நடவடிக்கை எடுக்கப் படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

# இனப்பிரச்சினை தீர்வுத்திட்டத்தில் தென்னாபிரிக்காவின் தலையீடு இருக்காது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார்

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் தென்னாபிரிக்காவின் தலையீடு இருக்காது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறிப்பாக தீர்வுத் திட்ட முனைப்புக்களில் தென்னாபிரிக்கா மத்தியஸ்தம வகிக்கப் போவதில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷாவின் இலங்கை விஜயமானது, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறைமை குறித்த தகவல்களை பகிர்ந்துகொள்ளும் நோக்கிலானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பிற்கு அமையவே ரமபோஷா இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜொகோப் சூமாவிற்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் ஓர் கட்டமாக ரமபோஷா இலங்கைக்கு விஜயம் செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

தெனனாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறைமையின் எந்த விடயங்களையாவது இலங்கை தீர்வுத் திட்ட முனைப்புக்களில் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதனை ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பினார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இவ்வாறான ஓர் பொறிமுறைமையை பயன்படுத்தி தீர்வு காண முடியுமா என்பது பற்றி ஆராயும் நோக்கில் ரமபோஷா இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## இதய வாசல்

ஒரு ஏழைப் பெரியவர் குடிசையில் வாழ்ந்து வந்தார். ஒருநாள் இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அந்தப் பெரியவரும் மனைவியும் அந்தக் குடிசைக்குள்ளே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து யாரோ திடீரென்று கதவைத் தட்டுவது மாதிரி சத்தம் கேட்டது. அந்தப் பெரியவர் முழித்துக் கொண்டு மனைவியை எழுப்பினார். வெளியே யாரோ வழிப்போக்கர். நமக்குத் தெரியாத நண்பர் வந்திருக்கிறார் போல இருக்கிறது.கதவைத்திற என்றார்.

அதற்கு அந்த அம்மா....

உள்ளே இடமே இல்லையே. எங்கள் இரண்டு பேருக்குமே இருக்க இடம்போதாதே... அப்படி இருக்கும் போது இன்னும் ஒருவர் எப்படி உள்ளே இருக்க முடியும்? என்றார்.

அதற்கு அவர் சொன்னார்: இது ஏழையின் குடிசை. இதில் எத்தனை பேர் வந்தாலும் இடம் உண்டு என்றார்.

நான் யதார்த்தமாக பேசுகிறேன். நீங்கள் தத்துவமாக பேசுகிறீர்களே என்றார் அந்த அம்மா. அதற்கு அவர் மறுபடியும் சொன்னார், மனதில் இடமிருந்தால் இந்தக் குடிசையே அரண்மனை மாதிரி நம்மால் உணர முடியும். உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சிறியதாகத்தான் தெரியும்.

இதுவரைக்கும் இந்தக் குடிசையில் நாம் இரண்டுபேர் படுத்திருந்தோம். இந்த இடத்தில் நிச்சயமாக மூன்று பேர் படுக்கமுடியாது. ஆனால் குறைந்தது மூன்று பேர் உட்காரலாம். அதனால் நாம் இருவரும் உட்கார்ந்தால் இன்னும் ஒருவருக்கு இங்கே இடம் கிடைக்கும் என்றார்.

அந்த அம்மா கதவைத் திறக்க உடம்பு முழுவதும் நனைந்துபோய் ஒருவர் நின்றார். கதவைத் திறந்ததும் உள்ளே வந்தார். மூன்று பேரும் உட்கார்ந்தபடி பேச ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரம் கழித்து இன்னும் இரண்டு பேர் வந்து கதவைத் தட்டினார்கள்.உடனே அந்தப் பெரியவர் வேறு யாரோ வந்திருக்கிறார்கள் போல இருக்கிறதே? கதவைத் திறவுங்கள் என்றார்.

சற்று முன் உள்ளே வந்த ஆள் கதவைப் திறப்பதா? இங்கே இடமே இல்லையே? என்றான்.

கொஞ்ச நேரத்திற்கு முன்னர் இவன் வெளியில் நின்றான். இந்தப் பெரியவரின் மனதால் தான் நமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான். கதவைத் திறக்க வேண்டாம் என்றான்.

அதற்கு அந்தப்பெரியவர் அன்பு தான் உங்களுக்கு இங்கே இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னமும் இருக்கிறது. அது உங்களுடன் முடிந்து போகவில்லை. தயவு செய்து கதவைத் திறந்து விடுங்கள்.

நாம் இப்போது கொஞ்சம் விலகித்தானே உட்கார்ந்திருக்கிறோம்.இனி கொஞ்சம் நெருங்கி உட்காரலாம். எல்லாம் சரியாகிவிடும் என்றார் அந்தப் பெரியவர்.

கதவைத் திறந்தார்கள். அந்த இரண்டு பேரும் உள்ளே வந்தார்கள். ஒரு வழியாக சமாளித்து உட்கார்ந்தார்கள். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்றார் திருவள்ளுவர். அது இது தான்.

வாழ்க்கையின் அமைதியான நேரம் எது தெரியுமா?

எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்தும் நேரம் இருக்கிறது பாருங்கள். இதைவிட அமைதியான நேரம் வேறு எதுவுமில்லை என்கிறார் ஓஷோ.

இது இப்படி இருக்க, நம் ஆள் ஒருவன்...

எங்கள் வீட்டுக்கு அடிக்கடி விருந்தினர் வருவது உண்டு. எவ்வளவு விருந்தினர்கள் வந்தாலும் கதவைத் திறந்து விட்டுவிட்டு மரியாதையாக நான் வெளியில் போய் விடுவேன் என்றான்.

ஏன் அப்படி செய்கிறாய்... என்று கேட்டேன்.

நான் வீட்டுக்குள் இருந்தால் அவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட வேண்டியிருக்குமே. அதனால் தான், நான் வெளியே போய் விடுவேன் என்றான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -9

## மகரந்த சேர்க்கை தொழில்நுட்பம்: கொடித்தோடையில் விளைச்சலைப் பெருக்க...

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-IX



தூரிகையினால் (கையினால்) கொடித்தோடை பூவில் மகரந்த சேர்க்கை செய்தல்


பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் பயிரிடும் பயிர்களில் கிட்டத்தட்ட 60 சதவீதமானவை அயன்மகரந்த சேர்க்கையினால் விளைச்சலைத் தரக் கூடியனவாகும். அயன்மகரந்த சேர்க்கையின்றேல் இப்பயிர்களில் காய் உருவாகாது விதை உற்பத்தியாகாது. இதனால் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படும். இதனை சிலர் அறிந்திருந்தாலும் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இவ்வாறான நிலையில் அயன் மகரந்த சேர்க்கையில் ஈடுபடும் காரணிகளாக பூச்சிகள், பறவைகள், இன்னும் காற்று என்பனவற்றை குறிப்பிடலாம். பூச்சிகளில் குறிப்பாக தேனீக்கள், வண்டுகள், தேனீக்களல்லாத பூச்சிகள் என பலவற்றை காணலாம். இருப்பினும் தேனீக்களின் பங்களிப்பு அளப்பரியது. இதனை தேனீவளர்ப்புடன் நாம் ஒப்பிட்டு பார்த்தால் தேனீவளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் நாம் பயிர்களின் விளைச்சலையும் அதிகரித்துக்கொள்ளலாம். தேனீவளர்ப்பு இளையவர்களுக்கு இன்னும் பெண்களுக்கு வசதியான வளமுள்ள வருமானத்தை தரும் தொழிற்றுறையாகும். தேனீவளர்ப்பு பற்றி அறிந்து கொண்டால் அதில் பலரையும் ஈடுபட வைத்துவிடலாம். எமது சூழலினை பாதுகாத்து அதிலுள்ள நன்மைதரும் உயிரினங்களின் பயனபாட்டை விருத்திசெய்தால் எமது விவசாய செய்கையினை சேதன விவசாய முறைகளுக்குளளே உள்ளார்ந்து கொண்டு செல்லலாம். இயற்கையாக தந்த வரத்தை விட்டு விட்டு செயற்கை உரத்தையும் செயற்கை பீடை நாசினிகளையும் நம்பிய எமது விவசாயத்திற்கு மாற்று வழி கண்டு பிடித்தேயாக வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட. தேவையற்ற பீடை நாசினி பிரயோகத்தால் முக்கியமாக தேனீக்களையும் மற்றும் ஏனைய மக ரந்த சேர்க்கையிலீடுபடும் பூச் சிகளையும் நாம் அழித்து விடு வதன் மூலம் எமக்கே பாதகத்தை விளைவிக்கின்றோம்.

விளைச்சலை அதிகரிப்பதற்கு அதிக உள்ளீடுகளை அதிக விலை கொடுத்து வாங்கி விசிறும் நாம் இயற்கையை மதித்து இயற்கையின் வருடலில் பயிர்ச்செய்கையை செய்தால் நிச்சயமாக விளைச்சலும் அதிகரித்து ஆதாயமும் அதிகமாக கிடைக்கும். பீடைநாசினிக்கு செலவிடும் பணத்தை இவ்வாறான மகரந்த சேர்க்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தலாம். இது அவசியமான ஒன்றும் கூட. இந்த விதத்தில் பார்த்தால் எமது தேவையற்ற செயலினால் பீடைநாசினிக்கு செலவழிப்பதுடன் தேவையற்ற விதத்தில் சுற்றுச் சூழ லையும் நாம் மாசுபடுத்தி விடுகின்றோம். மாசுபடுத்துவது ஒரு பக்கமிருக்க மறுபக்கத்தில் நன்மை தரும் உயிரினங்களையும் எமது சூழல் தொகுதியிலிருந்து விரட்டி விடுகின்றோம். இந்த விடயத்தை சரிவர புரிந்தால் எமது தேவையற்ற செயலினால் நாம் பயிரின் விளைச்சலை இழந்து விடுகின்றோம்.

அயன்மகரந்த சேர்க்கையினை எதிர்பார்த்திருக்கும் தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு மகரந்த சேர்க்கையாளர்களின் பிரசன்னம் அதி முக்கியமானது. வெறுமனே பீடை நாசினிகளை விசிறி அதுவும் அதிகாலையில் வசதிகருதி வீசுவதனால் அதிகாலையில் பூக்களை நோக்கிவரும் படையெடுக்கும் மகரந்த சேர்க்கையாளர்களை விரைந்து விரட்டவும் மேலும் அவ ற்றை அழித்தும் விட்டுள்ளோம். இதனால் இம்மகரந்த சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை விளை நிலத்தில் குறைவடைந்து அவற்றின் வாழிடங்களும் அழிக்கப்பட்டு தற்போது அவற்றின் எண்ணிக்கையில் கணிசமான அளவில் விழுக்காடு ஏற்பட்டிருக்கின்றது.

மகரந்த சேர்க்கை தொழில்நுட்பம் புதுமையானதாக இருந்தாலும் அது ஒன்றும் புதியதல்ல ஆனால், அதனது பயன்பாட்டை பலவாறாக விரிவுபடுத்த வழி வகை களை கண்டிருக்கிறோம். பல பயிர்களுக்கு நாமே எமது கைகளினால் மகரந்த சேர்க்கையை செய்து விளைச்சலைப் பெறவேண்டியிருக்கின்றது.


தேனீயினால் கொடித்தோடை பூவில் மகரந்த சேர்க்கை செய்யப்படுதல்

கொடித்தோடை இதிலொன்று. கொடித்தோடை தேனீக்களால் மகரந்த சேர்க்கைசெய்யப்படும் பழப்பயிராகும். ஆனால் கொடித்தோடையின் பூக்களில் ஆண் இனப்பெருக்க தொகுதி முன்பாகவும் பெண் இனப்பெருக்க தொகுதி அதாவது குறி பின்னருமாக முதிர்வடைவதால் இந்த மகரந்த சேர்க்கையை பொறுமையாக மிகவும் நுணுக்கமாகவும் செய்ய தேனீக்களின் உதவி தேவைப்படுகின்றது. ஆனால் நாங்கள் தானே பீடை நாசினிகளை வகைதொகையின்றி விசிறிய்தால் தேனீக்களை விளை நிலத்திலிருந்து விரட்டிவிட்டிருக்கின்றோம். இதனால் தேனீக்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு விழுக்காடாகியதால் விளைச்சலும் வீழ்ச்சியடைந்து விட்டது. இதனை நிவர்த்திக்க நாம் எமது கைகளால் மகரந்த சேர்க்கை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கொடித்தோடை போன்ற தாவரங்களுக்கு தேனீக்களின் வரவை அதிகரித்தால் நிச்சயமாக விளைச்சல் அதிகரிக்கும். சூழல் தொகுதியில் ஒவ்வொன்றுக்கும் ஒரு தொழில் உண்டு. இது இயற்கையின் நியதி. ஆனால் தேனீயை தேவையற்ற விதத்தில் விரட்டி விட்டு நாம் எமது கைகளால் அயன் மகரந்த சேர்க்கை செய்ய வேண் டியுள்ளது. மகரந்த சேர்க்கை தொழில்நுட்பத்தில் தேனீக்கள் எங்களை விட உயர்வானவை. ஆனால அவற்றை நாம் விரட்டிவிட்டு எமது கையினால் மகரந்த சேர்க்கையை ஒவ்வொரு பூவுக்கும் செய்ய வேண்டியிருக்கின்றது. உள்ள தொழில்நுட்பத்தை நாம் விட்டுவிட்டு புதிய தொழில்நுட்பம் தேடிக்கொண்டிருக்கின்றோம். இது பலதுக்கும் பொருந்தும். தேனீக்களை ஊக்குவித்து அந்த இயந்திரத்தை உலாவ விட்டாலே போதுமே. வினைத்திறனான அயன்மகரந்த சேர்க்கையால் விளைச்சல் பல்கிப்பெருகும். நாம் செலவழிக்கும் பணத்திற்கு ஆதாயமும் கிடைக்கும். இந்த தொழில் நுட்பத்தை நாம் முழுமையாக பயன்படுத்த முயல வேணடும். கொடித் தோடை ஒரு ஆதாயம தரக்கூடிய பழப்பயிர் உற்பத்தியாகும். குடிப்பதற்கு நல்ல பானமுமாகும்.

தொழிற்றுறை பெருக்கத்தில் உள்வாங்கப்படும் பழமுமாகும். இப்படியிருக்க தேனீக்களை அந்த இயற்கை உயிரியந்திரத்தை பயன்படுத்தி அயன் மகரந்த சேர்க்கையை விருத்தி செய்ய நாம் முனைவோம். அதற்கு தேவையற்ற பீடைநாசினி பிரயோகத்தை தவிர்க்க வேண்டியிருக்கும்.

தவிர்ப்பது ஒன்றும் கடினமான காரியமல்லவே. எம்மை பாதுகாகக, சூழலை பேணிப்பாது காக்க, பயிர்களில் அறுவடையை பெருக்க, தேன் உற்பத்தியை பெருக்க, சிறந்த தேனைப் பெற, வீட்டிலிருந்தவாறே தொழிலை செய்ய, குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வருவாயை அதிகரிக்க இவ்வளவு பயன்பாட்டையும் பெற இந்த தொழில் நுட்பம நிச்சயமாக கைகொடுக்கும. முயற்சி திருவினையாக்கும். ட்றாகன் (Dragon fruit) பழத்தின் உற்பத்திக்கும் மகரந்த சேர்க்கையாளர்கள் அவசியம். வரண்ட வலய பழமாக இருப்பதாலும் வட பகுதியில் இதனை பயிரிட்டு பலன் பெற முடியும் என்பதாலும் இனனும் இதுபற்றி அடுத்த வாரம் அலசியாராய்வோம்.

(அடுத்த வாரம் தொடரும்...)

## மஹிந்தவின் ஆட்சியிலேயே இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் ஏற்பட்டது

### சாடுகிறார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர்

இலங்கையின் மீது சர்வதேச அழுத்தம் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்திலேயே ஏற்பட்டது என்று ஜனநாயக மக்கள் முன்ன ணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அரசியல் நிகழ்ச்சி ஒன்றின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில், 1989 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக கூறி இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அன்று ஜெனிவாவுக்கு சென்று முறையிட்டார். எனவே இன்று அவர் சர்வதேச தலையீடு பற்றி கூறுவது அபத்த மானது என்று மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

போரின்போது சர்வதேசத்தின் உதவியை பெற்றுக்கொண்ட இலங்கையின் சிங்கள கட்சிகள் இன்று சமாதானத்துக்கு மாத்திரம் சர்வதேசத்தின் உதவியை மறுப்பது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பினார். மேல்மாகாணத்தில் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு உள்ள அதிகாரங்கள் வடக்கின முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இல்லை என்றும் மனோகணேசன் குறிப்பிட்டார். (2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் முழு நிலா நாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் மது, புகைப்பொருள் பாவனைக்குறைப்பில் சமூகத்தின் பங்கு எனும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இதற்கமைய இக் கருத்தரங்கினை ஹெல்தி லங்கா-இராஜகிரிய மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் இ.சிவநாயகம் [illegible] ளார். (2)

## பொ.ந.வாய சொகுசு பேருந்துகள் கொள்வனவில் முறைகேடுகள்

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது நிதி முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் இணங்கியுள்ளது.

குறித்த மாநாட்டின்போது சொகுசு பேருந்துகளை கொள்வனவு செய்ததன் மூலம் இந்த முறைகேடுகள் இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியிருக்கிறார்.

சீன நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த பேருந்துக்கள் 20 வீத அதிகரித்த பெறுமதி குறிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டதாக கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பதில் அளித்த பிரதி நிதியமைச்சர் சரத் அனுமுகம, உரிய ஆவணங்களை சமர்ப்பித்தால் விசாரணைகள் மேற்கொள்ளப படும் என்று உறுதியளித்தார்.

இந்த முறைகேட்டின்போது 100 பேருந்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 5 பேருந்துகள் ஜனாதிபதி செயலகத்துக்கு வழங்கப்படடதாக ரவி கருணாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய சந்தர்ப்பம் வேண்டும்

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் ஈ.பி.டி.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற காணாமற போனோர் தொடர்பான விசாரணைக்குழுவின் விசாரணையின் போது எமது கட்சியைக் குறிப்பிட்டு பெண்ணொருவர் கூறிய கருத்துக்கள் எமக்கு வேதனையளிக்கின்றது என்று சுட்டிக்காட்டி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா காணாமற் போனவர்கள தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கோரிக்கை விடுத்து கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2006 ஆம் ஆண்டு அரியாலை பிரதேசத்தில் அப்பெண்மணி வசித்து வந்ததாகவும், அப்போது வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் தனது கணவரை கடத்திச் சென்றதாகவும் தெரிவித்திருந்தார்.

அப்போது ஆணைக்குழுவினர் அந்தப் பெண்மணியிடம் உங்கள் கணவர் கடத்தப்பட்ட பகுதியை அந்தக் காலப்பகுதியில் நிர்வாகம் செய்து கொண்டிருந்தது இராணுவமா? தமிழீழ விடுதலைப் புலிகளா? என்று கேட்டபோது, சாட்சியமளித்த அந்தப் பெண்மணி, அந்தப் பகுதியை ஈ.பி.டி.பியினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று கூறியதாக செய்திகள் வெளியாகி இருந்தது.

அச்செய்தி உண்மையாயின் அக்கூற்றின் உண்மைத்தன்மையை வெளிக் கொணர்வதற்கு அச்சாட்சியினை குறுக்கு விசாரணை செய்ய எனது சட்டத்தரணிகளுக்கு சந்தர்ப்பம் வழுங்க முடியுமா? என்பதை எமக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விசாரணைக் குழுவுக்கு கோரிக்கை விடுத்து கடிதம் எழுதியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் ஈ.பி.டி.பி அரசியல் விவகாரங்களில் செயறபடும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும். எமது கட்சி எக்காலத்திலும், எந்தப்பிரதேசத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை.

ஆகையினால் அந்த சாட்சியினால் கடந்த 08 ஆம் திகதி அன்று கூறப்பட்ட வாக்கு மூலமானது உண்மைக்குப் புறம்பானதாகும் என்றும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடடுள்ளார். (செ-6)

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைக்கான விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட அலுவலகர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி க.பொ.த(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று .16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண் டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட அலுவலகர் NAITA இல-44 சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (ICTT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# அங்கீகாரமற்ற மருந்து பாவனை; விழிப்புடன் இருக்க எச்சரிக்கை

போலியாக தயாரிக்கப்பட்ட ,இறக்குமதி செய்யப்பட்ட, உரிய முகவர்களினூடாக விநியோகிக்கப்படாத ஆயுள்வேத மருந்துகள் விநியோகத்திலுள்ளதாக அங்கீகாரம் பெற்ற மருந்து விநியோக நிறுவனங்கள் எமக்கு அறிவித்துள்ளன.

எனவே இது தொடர்பில் ஆயுள்வேத மருந்துகளை கொள்வனவு செய்யும் ஆயுள்வேத மருத்துவர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தரத்தினை உறுத்திப்படுத்தி கொள்வனவை மேற்கொள்ளுமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்தியர் திருமதி. சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஒவ்வொரு வைத்தியரும் அக்கறை கொள்ளும் போது மட்டுமே இப் போலிகளை இனங்காண முடியும். எனவே ஒவ்வொருவரும் இவ்விடயம் தொடர்பில் தங்கள் மேலான கவனத்தை செலுத்தி தரமான சுதேச மருத்துவ சேவைகளை உறுத்திப்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# ஏ.ரி.எம்.பண மோசடியில் ஈடுபட்ட இலங்கை அகதிகள் நால்வர் கைது

தன்னியக்க பண இயந்திரங் களில் போலி அட்டைகளை பயன் படுத்தி பணம் பெற்றதாக கூறப்படும் இலங்கை அகதிகள் நால் வரை பலலூரித்தி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாடு திருச்சியிலுள்ள அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டோரிடமிருந்து 372 போலி அட்டைகள், மடிக் கணினியொன்று, அட்டை படிப்பான், அட்டை தேய்க்கும் இயந்திரம், 14 இலட்சம் ரூபா பணத்தை பதுக்கி வைத்திருந்த கார் ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் 1996 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து அகதிகளாக திருச்சிக்கு வந்ததாகவும் லண்டன் மற்றும் ஜேர்மனியிலுள்ள ஹோட்டல்களில் தொழில் புரியும் ஐரோப்பியர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் நகர பொலிஸ் ஆணையாளர் கே.ஜி.ஜெம்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பலலூரித்தி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (செ)



வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் தலைவர் ரூபராஜ் தலைமையில் பரந்தனில் நடைபெற்ற போது அங்கத்தவர்களின் கலைநிகழ்வுகளையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# இலக்கிய,கலை போட்டிகள் முடிவு

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இலக்கிய கலைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய திறந்த போட்டியாளர்களின் பெயர் விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய போட்டியாளர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பாடல் ஆக்கப்போட்டி**

ஜெ.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு),ந.இராமநாதன் (உடையார் கட்டு), யோ.புரட்சி (வள்ளுவர்புரம்)

**இலக்கிய விவரணப் போட்டி**

பூ.கஜேந்திரன் (றெட்பானா), ந.இராமநாதன் (உடையார் கட்டு), திருமதி. க.விமலாசினி (றெட்பானா)

**சிறுகதைப் போட்டி**

ந.இராமநாதன் (உடையார்கட்டு), திருமதி.க.விமலாசினி (றெட்பானா), ஜெ.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு)

**கவிதைப் போட்டி**

ந.இராமநாதன் (உடையார் கட்டு), ஜெ.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு), சூ.அன்ரன் (மந்துவில்)

**சிறுவர் கதைப் போட்டி**

பூ.கஜேந்திரன் (றெட்பானா), ந.இராமநாதன் (உடையார் கட்டு), ஜெ.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு)

**நாட்டார் கலைப் போட்டி**

திருமதி.க.விமலாசினி (றெட்பானா) (22)

## பொதுமயானத்திற்கு கொட்டகை அமைப்பு

(கிளிநொச்சி)

திருவையாறு பொது மயானத்தின் எரியூட்டும் கொட்டகையின் விறகடுக்கும் பகுதியும் மேற்கூரையும் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபை உறுப்பினரான இ.பொன்னம்பலநாதனால் 2014 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து இதற்கான பண உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-271)

## கும்பாபிஷேகம்

(பூநகரி)

பூநகரி சோபாலபிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (செ-84)

# தொழில் வளங்களை மீளவும் வன்னியில் உருவாக்கி தாருங்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

வன்னியிலுள்ள இயங்காத நிலையில் இருக்கும் தொழிற்சாலைகளை மீளவும் இயக்குவதன் மூலமாக இப்பிரதேச மக்களுக்கான வேலை வாய்ப்பினை வழங்கி அவர்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் யாழ். மருத்துவ பீட இறுதியாண்டு மாணவனும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான பரமநாதன் குமாரசிங்கத்தினால் வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

அண்மையில் வடமாகாண முதலமைச்சரும் மாகாண சபை உறுப்பினர்களும் கிளிநொச்சிக்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே அவரால் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவ் வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கரைச்சி பிரதேசசபையின் பாரதி [illegible] உள்ளடக்கிய கரைச்சி பிரதேச சபை உறுப்பினராகவும் அதேவேளை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவனுமாவேன்.

பிரதேச சபை உறுப்பினர் என்ற வகையில் தங்களின் கவனத்திற்கு சில வற்றை முன்வைக்க விரும்புகிறேன். அவற்றில் மிகவும் முக்கியமான ஒன்று குடிநீர் பிரச்சினையாகும். கிருஷ்ணபுரம், பாரதிபுரம், மலை யாளபுரம் ஆகியவை நீரின்றி வரண்டு போயுள்ளன.

இங்குள்ள பொதுக்கிணறுகளில் சிலவற்றில் முற்றுமுழுதாக நீர்வற்றியுள்ளது. இதன்காரணமாக அவற்றைபயன்படுத்தி வந்த பொதுமக்கள் அனைவரும் தற்போது குடிநீருக்காக நாளாந்தம் சிரமமடைகிறார்கள்.

இப்பிரச்சினைக்கு தீர்வாக பொதுக் கிணறுகளில் மேலும் ஆழப்படுத்துவதற்காக குண்டடிப்பதன் மூலம் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என நம்புகிறேன். அல்லது பொதுமக்கள் பாவனைக்கென குழாய்க்கிணறுகளை அமைப்பதன் மூலமாகவும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பது எனது தாழ்மையான கருத்து.

மேலும், இங்குள்ள அடுத்த பாரிய பிரச்சினை வேலையில்லாப் பிரச்சினையாகும்.

எனவே, இப்பிரதேசத்தில் இயங்கிய தொழிற்சாலைகளை மீளவும் இயக்குவதன் மூலமாக இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும். உதாரணமாக பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டம் என்பன மீளவும் இயங்கத் தொடங்கினால், அது வன்னி பிரதேச மக்களுக்கு பெரிய கொடையாக அமையும்.

அத்துடன் வறுமையிலிருக்கும் அவர்களின் கரங்களை பலப்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென அவரது வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு நிர்வாகத்தையும் மத்திக்கு இழுக்காது மாகாணத்திற்கும் பரவலாக்குவது முக்கியம்

## சிறந்த ஆட்சி குறித்து முதலமைச்சர் கருத்து



(யாழ்ப்பாணம்)

**நாட்டின் முழுவாரியான சிறந்த ஆட்சிக்கு அல்லது நிர்வாகத்திற்கு எல்லாவற்றையும் மத்திக்கு இழுக்காது மாகாணத்திற்கும் பரவலாக்குவது முக்கியம் என்று வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

உள்ளூராட்சி சீர்திருத்த ஆரம்ப முயற்சி பற்றிய ஆற்றுப்படுத்தும் நிகழ்வு கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஆற்றப்படும் மக்கள் சேவைகளைச் சீர்திருத்திச் சிறந்ததாக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். அது சம்பந்தமாகப் பல விடயங்களை ஆராயவுள்ளோம். இதற்கு அனுசரணையாக ஏசியா பவுண்டேஷன் நிறுவனம் செயற்படுவதையிட்டு அவர்களுக்கு எம் எல்லோரதும் பாராட்டையும், நன்றியறிதல்களையும் தெரியப்படுத்தி மகிழ்கின்றோம்.

இலங்கையில் மூன்று வகையான ஆட்சிகள் அமைந்துள்ளன. அவற்றுள் மூன்றாம் நிலை ஆட்சியாக உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. முதலில் மத்திய ஆட்சி, அடுத்து மாகாண ஆட்சி மூன்றாவதாக உள்ளூர் ஆட்சி என்றிருக்கின்றன. உள்ளூர் ஆட்சி கூட மாநகராட்சி, நகராட்சி, பிரதேச சபையாட்சி என்று மூன்றாக அமைந்துள்ளன.

தேசிய மட்டத்திற்குக் குறைந்த அதிகார மையங்களின் அதிகாரத்தையும் ஆற்றலையும் அதிகரிக்கும் வண்ணமாகவும் முழுமையான நிர்வாக அமைப்பின் நல்லாட்சியையும் சிறப்பையும் பெருக்கும் வண்ணமாகவும் துணை நின்று உதவுங் கொள்கையின் படி மத்திய மாகாண உள்ளூர் மட்டங்களில் இருக்கும் நிறுவனங்களிடையே கூட்டுப் பொறுப்புத் தன்மையை வளர்க்கும் விதமாக அதிகாரத்தை மாற்றி அமைப்பதோ அல்லது சீர்படுத்துவதோ தான் அதிகாரப் பரவலாக்கல் அல்லது ஆட்சியைப் பரவலாக்கல் எனப்படும்".

இக் கூற்றிலிருந்து நாட்டின் முழுவாரியான சிறந்த ஆட்சிக்கு அல்லது நிர்வாகத்திற்கு எல்லாவற்றையும் மத்திக்கு இழுக்காது, பரவலாக்கல் முக்கியம் என்பது இக் கால அரசியல் சித்தாந்தமாக அமைவதை நாங்கள் நோக்கலாம்.

எனவே உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அதிகாரங்களை உரியவாறு பிரயோகிப்பது, உத்தமமாகப் பிரயோகிப்பது நாட்டின் நல்லாட்சிக்கு உதவும் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. அந்த வகையிலே நீங்கள் யாவரும் ஒரு பாரிய நிர்வாக யந்திரத்தின் ஒரு பகுதியே என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சைக்கிளின் சில்லிலே இருக்கும் கம்பிகள் ஒவ்வொன்றும் அந்தந்தவாறு இருந்து உறுதியாகச் செயற்பட்டால்த்தான் சைக்கிளை நாங்கள் செவ்வனே ஓட்டிச் செல்லலாம். ஒன்று, இரண்டு உடைந்திருந்தால் அல்லது தளர்ச்சி அடைந்திருந்தால் சைக்கிளை ஓட்டலாம். ஆனால் விரைவில் அதன் வேகமும் செயற்றிமையும் பாதிப்படையும். இப்பொழுது உங்களுக்கு எமது இன்றைய இந்த கருத் தரங்கத்தின் முக்கியத்துவம் புரிந் திருக்கும் என்று நம்புகின்றேன். அதாவது எமது நன்மைக்காகவும், மாகாணத்தின் நன்மைக்காகவும், முழுநாட்டிற்காகவும் எமது நடைமுறைகளை, செயற்றிறனை மேம்படுத்துவது அத்தியாவசியமாகின்றது. எனவே எமக்காக மட்டும் அல்லாது முழு நாட்டிற்கும் அது நன்மையைப் பயப்பதாய் அமையும்' என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிரதேச சபையாக இருந்தால் என்ன, மாகாணசபையாக இருந்தால் என்ன, மத்திய அரசாங்கமாக இருந்தால் என்ன உறுப்பினர், அலுவலர் யாவரும் ஒன்றை மனதில் உறுதியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். நாம் இவற்றில் அங்கம் வகிப்பது எம்மை இந்தப் பதவிகளில் ஏற்றிய அல்லது நிறுத்திய பொதுமக்கள் சார்பிலேயே அத்துடன் அவர்களின் நலன் கருதியே. எனவே அவர்களுக்காக எங்கள் செயற்றிறனை, புரிதிறனை நாங்கள் கட்டாயமாக மேம்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாது விட்டால் நாங்கள் பின்தங்க நேரிடும். என்னுடைய முது வயதில் கணனி என்ன வேண்டியிருக்கிறது என்று நான் ஒரு பதினைந்து வருடங்களுக்கு முன்னர் வாழாதிருந்து விட்டேன். வெளிநாடுகளுக்குக் கருத்தரங்கங்களில் பங்கெடுக்கப் போனபோது தான் கணனி அறிவு எவ்வளவு அவசியம் என்று புரிந்து கொண்டேன். உங்கள் மெயில் விலாசம் என்ன என்று ஒவ்வொருவரும் கேட்க எனக்கு கணனி அறிவு இல்லை என்று சொல்லக் கூச்சமாக இருந்தது. எனவே தான் முதுமையிலும் கணனி அறிவை ஓரளவு பெற்றுக் கொண்டேன். வாழ்க்கை நாளாந்தம் மாறிக் கொண்டு போகின்றது. எங்கும் எதிலும் வேகம் காணப்படுகின்றது. அந்த வேகத்திற்கு நாங்கள் முகங் கொடுத்து முன்னேறினால்தான் வருங்காலம் வளம் உள்ளதாய் இருக்கும்,நலம் உள்ளதாய் அமையும். அதற்கேற்றவாறு எம்மை வருங்காலத்திற்காக மாற்ற இன்றைய கருத்தரங்கம் உதவி செய்கின்றது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# இரு நாட்கள் மின் தடை

உயரழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இத ற்கமைய இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, கைதடி வடக்கு நவபுரம், நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு பிரதேசத்திலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை இளவாலை,மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான், நிச்சாமம், தொல்புரம், சுழிபுரம் சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி ஆகிய இடங்களிலும்மின்விநியோகம்தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# அதிகார பரவலாக்கமே தமிழர்களுக்கு தேவை

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு என்பது வரலாற்று காலம் முழுவதும் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அதிகார பரவலாக்கமே தமிழர்களுக்கு தேவை எனவும் நாட்டை பிரிக்க வேண்டிய தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாட்டிற்கு சுயநிர்ணய உரிமை உள்ள ஆட்சி நிர்வாகத்தையே நாங்கள் கோருகிறோம். நாங்கள் நாட்டை பிரிக்குமாறு கோரவில்லை.

போர் முடிவடைந்து 5 வருடங்கள் ஆகி விட்டது என்பது உண்மை. 60 வருடங்களாக நடைபெற்ற போராட்டங்கள் மற்றும் யுத்தம் காரணமாக தமிழ் மக்களுக்கே அதிகளவான உயிரிழப்பு ஏற்பட்டது.

இரண்டாவதாக சிங்கள மக்களும மூன்றாவதாக முஸ்லிம் மக்களும் இதனால் பாதிக்கப்பட்டனர்.

போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்தும் உயிரிழந்த தமிழ் பொது மக்களை நினைவுகூர அரசாங்கம் இடமளிப்பதில்லை.

போர் முடிந்தாலும் இராணுவமயப்படுத்தல் மற்றும் நில சுவீகரிப்பு என்பன தொடர்கின்றன.

2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி போர் முடிந்து விட்டது என ஜனாதிபதி அறிவித்தார். விடுதலைப் புலிகளின் முகாம்கள் இல்லை என கூறினார்.

தமிழ் மக்களை அச்சுறுத்தி அவர்களை தவறாக வழிநடத்தும் தேவையே அரசாங்கத்திற்கு உள்ளது. இந்த போர் இரண்டு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட போர் அல்ல. உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட போர் எனவும் அவர் கூறியுள்ளார். (2)

# கருத்துப்பகிர்வு

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் கருத்துப்பகிர்வு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்க கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வின் தொடக்கவுரையினை அ.கதிர்காமர் ஆற்றவுள்ளார்.

இதேவேளை சமூகப் பிறழ்வுகளும் உளவியல் காரணமும் எனும் தொனிப்பொருளில் பேராசிரியர் தயாசோமசுந்தரம் கருத்துரையினை வழங்கி வைப்பார்.

எனவே ஆர்வமுள்ள அனைவரும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தினர் கேட்டுள்ளனர்.

# கும்பாபிஷேக மலர் வெளியீடு

(இருபாலை)

இருபாலை கட்டப்பிராய் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் இராஜ கோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் மேற்படி ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திர கலந்து கொள்ளவுள்ளார்.

இச்சிறப்புமலர் வெளியீடுநாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தீர்த்த உற்சவத்தின் சிறப்பு நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-136)







யாழ்.கல்வி வலயத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கலைவிழா யாழ்.இந்து மகளிர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வின் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கடந்த ஆண்டு அழகியல் கூட அலங்கரிப்பு போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர் ஒருவருக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட எஸ்.ராஜேந்திரா கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற நாடக நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயைதொடக்கத்திலேயேகுணப்படுத்துங்கள். கடனை சிறியதாக இருக்கும்பொழுதே செலுத்தி விடுங்கள். - கதே

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## இனப்பிரச்சினைக்கான தீர்வில் மோடி அரசு களம் இறங்க வேண்டும்

யார் வந்தாலும் அவர்களுக்கு மாலை மரியாதை கொடுத்து வந்தவரைக் குளிரப்பண்ணி அவரின் கடமையை திசைதிருப்பும் யுக்திகளுக்கு இலங்கையில் குறைவேயில்லை.

இதன் காரணமாக இலங்கைக்கு தூது வருகின்றவர்களின் நோக்கம் சிதைவடைந்து போகின்றது.

உண்மையில் தூது வருவோர் அரசிடமிருந்து எந்த உபசரணையையும் வரவேற்பையும் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பது பொது நியதி.

ஆனால் இலங்கையில் அந்த நியதியைக் கடைப்பிடிப்பது என்பது முடியாத காரியம் என்றாகி விடுகின்றது.

இதற்கு அப்பால், தூது வருகின்றவர்கள் நாங்களும் தூது சென்றோம். நாங்களும் சமாதான முயற்சியில் பங்கெடுத்தோம் என்று பெயர் எடுப்பவர்களாக இருக்கின்றனரே தவிர, அவர்கள் தங்களின் தூது முயற்சி வெற்றியளிக்கக் கூடிய அதிகாரத்தை உடையவர்களாக இருப்பதில்லை.

இலங்கையில் நடந்த சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக வந்த நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

மாறாக அவரின் சமாதான முயற்சிக்கு சந்தர்ப்பம் கொடுத்ததுதான் தமிழர் தரப்பின் தோல்விக்கும் இழப்பிற்கும் காரணம் என்று கூறுமளவில் நிலைமை உள்ளது.

ஆக, வல்லமையற்ற - அதிகாரமற்ற நாடுகளின் தூது முயற்சி ஒரு தரப்பிற்குத் தோல்வியைக் கொடுக்கும் என்ற உண்மையை தமிழர்களாகிய நாம் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம்.

எனவே தூது முயற்சியில் ஈடுபடுவோரின் அதிகாரம், தகைமை, அவர் தனது தூது தொடர்பில் எடுக்கக்கூடிய இறுதித் தீர்மானம் என்பன குறித்த பலம் - பலவீனங்களை நாம் அறிய வேண்டும்.

இதை விடுத்து யார் வந்தாலும் ஐயா வாருங்கள் என்று கைகூப்பும் அளவில் எங்கள் நிலைமை இருக்கக் கூடாது.

அதேநேரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின் எந்த நாடு முயற்சி செய்தால் அது சாத்தியமாகும் என்று பார்ப்பதும் அவசியம். அவ்வாறானதொரு நோக்கில் இலங்கையைப் பொறுத்தவரை இந்திய அரசு எடுக்கக் கூடிய சமாதான முயற்சி - சமாதானத் தூது என்பனவே ஒரு முடிவைத் தரக்கூடியதாக இருக்கும்.

எனினும் அப்படியானதொரு முயற்சியை காங்கிரஸ் ஆட்சியில் இந்தியா செய்திருக்காது; செய்திருக்கவும் முடியாது.

ஆனால் இப்போது மோடியின் அரசு இந்தியாவை ஆள்கிறது. எனவே இப்போது இருக்கக் கூடிய மோடியின் அரசு இலங்கையில் சமாதான முயற்சியை மேற்கொள்வதே பொருத்தமானதாகும்.

ஆயினும் அதற்கான கோரிக்கையை இலங்கை அரசு விடுக்கும் என்று யாரேனும் கருதினால் அதுவே முதற்தர மடமைத்தனமாக இருக்கும்.

எனவே சமாதான முயற்சியை முன்னெடுக்குமாறு இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்பிடமே உண்டு.

இருந்தும் தென்னாபிரிக்காவின் சமாதான முயற்சிக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் போது இந்தியா எட்டி நிற்கவே செய்யும்.

சமாதானத் தூது முயற்சியில் இன்னொருவர் ஈடுபடும்போது அது விடயத்தில் இந்தியா மூக்கை நுழைக்க விரும்பாது. அதேநேரம் முயற்சியை முறியடிக்கவும் நினைக்கலாம்.

ஆகையால் அவரும் வேண்டாம் இவரும் வேண்டாம் இந்தியாவே தூது வர வேண்டும் என்று கடும்பிடியாக நிற்பதே தமிழர்களாகிய எங்களின் முடிவாக இருக்க வேண்டும். இதுவே புத்திசாலித்தனமானதாகவும் இருக்கும்.

## உயர்தர மாணவர்களுக்கான விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வு இன்றும் நாளையும் யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (கலைப்பிரிவு), யாழ் மத்திய கல்லூரி (கணித, விஞ்ஞானப் பிரிவு), யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி (வர்த்தகப் பிரிவு) ஆகிய கல்லூரிகளில் கொழும்பு, யாழ்ப்பாண பிரபல விரிவுரையாளர்களினால் நடத்தப்பட உள்ளது.

யாழ் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் மற்றும் LCBT City Campus ஆகியவற்றால் இச் செயலமர்வு இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (செ-6)

## நடனக் குழுமம் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(கரணவாய்)

எதிர்காலத்தில் கலைத்துறையினை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூலம் சகல மாகாணத்திலும் கலாசாரம் மற்றும் கலை ஆக்கங்கள் அமைச்சினால் நடனக்குழுமம் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நடனக் குழுவிற்கு இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகிறது.

இதற்கமைய ஆண்கள் 16 வயது தொடக்கம் 35 வயதுக்கு இடைப் பட்டவர்களாகவும் பெண்கள் 16 வயது தொடக்கம் 21 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

எனவே, இந் நடனக்குழுமத்திற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கரவெட்டி பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (2-60)

## தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு ஆவணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள மடத்தடி (கொன்வென்ற் பாடசாலை அருகில்) அரச மரத்தின் கீழ் தனிநாயகம் அடிகள் நினைவு முற்றம் அமைக்கப்படும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய தனிநாயகம் அடிகளாரின் பிறந்த தினமாகிய ஆவணி மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அடிகளாரின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் யாழ். மாவட்ட ஆயர் அதி.வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பராமாச்சார்ய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## குருபூர்ணிமா தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சந்தி இல.17, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் மேற்படி குருபூர்ணிமாவை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் இன்று மாலை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும்.

எனவே ஆர்வமுள்ள அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு மேற்படி நிலைய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் குருபூர்ணிமா தினமும் 47 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-2)

# அரசு சரியான பாதையில் பயணம் செய்கின்றது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறுகின்றார்

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள மற்றும் முஸ்லிம் கடும்போக்குவாத அமைப்புக்கள் இயங்கி வருவதாக ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கடும்போக்குடைய அமைப்புக்களை இல்லாமல் செய்ய அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன சமூகங்கள் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷாவிற்கு இந்த நிலைமைகளை நேரில் பார்வையிட சந்தர்ப்பம் கிட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை ஆட்சி கவிழ்ப்பதற்கான ஓர் உத்தியாக சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஏனைய வெளிநாட்டு சக்திகளும் பயன்படுத்திக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சரியான பாதையிலேயே பயணம் செய்கின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து திருப்தி அடைய முடியும எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# தனியார் பேருந்து முறைப்பாடுகளுக்கு தொலைபேசி இலக்கம் அறிமுகம்

## கமெரா பொருத்தவும் ஏற்பாடு

தனியார் பேருந்துகள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்காக புதிய தொலைபேசி இலக்கம் மற்றும் ஸ்கைப் வசதிகளை தனியார் போக்குவரத்து அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் 0716550000 என்ற அவசர தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு தனியார் பேருந்துகளில் முறைகேடுகள் குற்றச்சாட்டுகள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். இதேபோன்று (private transport services) என்ற ஸ்கைப் விலாசத்திற்கு அல்லது (mprivatetransport@gmail.com) என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியுமென அமைச்சு அறிவித்துள்ளது.

பயணிகளினால் செய்யப்படும் முறைப்பாடுகளின் போதுமான தகவல்கள் இல்லாத காரணத்தினால் அவை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது.

எனவே, முறைப்பாடுகள் செய்யும் போது வாகனத்தின் இலக்கம், வழி இலக்கம், நேரம் போன்றவை தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

பயணிகளுக்கு வழங்கப்படுகின்ற அனுமதிச்சீட்டை கவனமாக வைத்திருக்க வேண்டும். விசாரணைகளை நடத்துவதற்கு இது ஏதுவாக அமையும்.

இந்நிலையில் தனியார் போக்குவரத்து அமைச்சின் முறைப்பாட்டு பிரிவு கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 167 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவற்றில் தேசிய போக்குவரத்து பேருந்து வண்டிகள் தொடர்பில் 73 முறைப்பாடுகளும் மாகாண போக்குவரத்து பஸ்வண்டிகள் தொடர்பில் 94 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அத்தோடு எதிர்வரும் காலங்களில் பேருந்து வண்டிகளில் கமராக்கள் பொருத்துவதற்கும் அமைச்சர் சி.பீ.ரத்நாயக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார். (2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### அந்தர்யாமின் என்றால் என்ன?

ஆகையால் உங்கள் அந்தர் யாமினுடன் உங்களுக்கு பேச முடிந்தால் நீங்கள் எனும் ஒரு பாகம் அந்த முழுமையின் விருப்பத்திற்கு இணங்க செல்கிறீர்கள் என்று பொருள். அதாவது தெய்வத்தின் இச்சைக்கு இணங்கச் செயற்படுகிறீர்கள். தெய்வத்தின் விருப்பத்திற்கு இணங்க செயற்பட விருப்பம் இருந்தால் மட்டும் போதாது. தெய்வத்தின் விருப்பம் என்னவென்று உங்களுக்குத் தெரியவேண்டும். அந்த உயர் சைதன்யத்தின் விருப்பம் என்னவென்று தெரியாவிடில் நீங்கள் கூட்டத்திலிருந்து பிரிந்த ஒரு பறவையைப் போலவேதான். உண்மையில் நீங்கள் ஓர் அநாதை. ஆகையால் அந்தர்யாமின் என்பது உயர் சைதன்யம் முழுமை அல்லது பூர்ணம். உங்களுக்கு அந்தர்யாமின் உள்ளது என்று கூறினால் நீஞ்கள் அந்தப் பூர்ணத்துடன் தொடர்பு கொண்டுள்ளீர்கள் என்று அர்த்தம். இல்லெயெனில் நீங்கள் ஒரு அநாதைதான்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அமைதியாகப் பணியாற்று



- தொண்டாற்ற விரும்புபவர்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை மூட்டை கட்டி கடலில் தூக்கி எறிந்து விட்டு, கடவுளிடம் சரணாகதி அடைந்து விடவேண்டும்.
- தற்பெருமை சிறிதும் வேண்டாம். பொறாமைப் படுவதும் கூடாது. பூமித்தாயைப் போல பொறுமையுடன் பணியாற்றுங்கள். உலகமே உங்கள் காலடியில் கிடக்கும்.
- எந்த வேலையையும் ஒழுங்கு, அமைதியுடன் செய்ய பழகுங்கள். குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு அதைநோக்கிய பயணமாக வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.
- செல்வம், புகழ், சுகபோக வாழ்வு இவையெல்லாம் சில காலம் மட்டுமே. உலக ஆசையில் மூழ்கி விடாதீர்கள்.
- முயற்சியுடன் உழைத்தால் நம்மிடம் பெருஞ்சக்தி உண்டாவதை உணரமுடியும். பிறருக்காகச் செய்யும் சிறு முயற்சி கூட, சிங்கத்தின் பலத்தை தந்து விடும்.
- மனத்தளர்ச்சி சிறிதும் கூடாது. எப்போதும் இனிமையோடும், மன உறுதியோடும் இருக்கப் பழகுங்கள். இது பிரார்த்தனையை விட முக்கியமானது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எல்லேயில் இராணுவ அணிகள் சம்பியன்













யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற எல்லே விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள். பெண்கள் பிரிவுகளில் இலங்கை இராணுவ அணிகள் சம்பியனாகின.

மேற்படி சுற்றுப்போட்டிகளில் யாழ்ப்பாணம். தெற்கு. முப்படைகள். மற்றும் பொலிஸ் ஆகியவற்றிலிருந்து 31 அணிகள் பங்குபற்றியிருந்தன. போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் பலாலி இராணுவ மைதானம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதிப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் இலங்கை இராணுவ அணியும் நீர்கொழும்பு தங்கொட்டுவ ஜனமத அணியும் மோதின.

40 பந்துவீச்சுக்களைக் கொண்ட இறுதிப்போட்டியில் முதலில் ஆடிய இராணுவ அணி 16 ஓட்டங்கள் பெற்றது.

17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி யென்ற நிலையில் களமிறங்கிய நீர்கொழும்பு தங்கொட்டுவ ஜனமத அணி 34 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றது. மிகுதி 6 பந்துகளில் 8 ஓட்டங்கள் பெறாமுடியாது. எனவே ஆட்டம் முடிவடைந்து. இராணுவ அணி வெற்றிபெற்றது.

முன்னதாக இடம்பெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் இராணுவ அணி நீர்கொழும்பு பகதர விளையாட்டுக்கழக அணியினை வென்று சம்பியனாகியது.

சம்பியனாகிய அணிக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசிலும். வெற்றிக்கேடயமும். இரண்டாம் இடம் பெற்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும் கேடயமும் வழங்கப்பட்டன.

இறுதிப்போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கும். சிறப்பாக செயற்பட்ட வீர. வீராங்கனைகளுக்குமான பரிசில்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா. இராணுவத்தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரத்நாயக்க. வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி. யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா உள்ளிட்டவர்கள் வழங்கினார்கள். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மூன்றாமிடத்திற்கான போட்டியில் பிரேசில்-நெதர்லாந்து இன்று மோதல்





உலகக்கோப்பை காற்பந்து போட்டியில் அரையிறுதி ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதியில் ஜேர்மனி அணியை எதிர்த்து பிரேசில் களமிறங்கியது. இதில் பிரேசில் அணி 1:7 என்னும் கோல்கள் அடிப்படையில் பெரும் தோல்வியை தலுவியது.

இரண்டாவது அரையிறுதியில் ஆர்ஜென்டினா அணியினை எதிர்த்து களமிறங்கிய நெதர்லாந்து அணி பெனால்டி சூட்டில் தோற்றமையால் ஆட்டத்தில் இருந்து வெளியேறியது.

இந்த இரு அணிகளும் 3 ஆவது இடத்துக்கான போட்டியில் மோதுகின்றன. இந்த ஆட்டம் இன்று 12 ஆம் தேதி நடக்கவுள்ளது.

## கோப்பாய் பி.செயலக மரதன் ஓட்ட முடிவுகள்

கோப்பாய் பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அண்மையில் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்.



15 மைல் மரதன் ஓட்டம் ஆண்கள்

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த பேரானந்தராசா தயாகரன் முதலாமிடத்தினையும் இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த செல்வநாதன் நிரோசன் இரண்டாமிடத்தினையும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த விஜயகாந்தன் துர்க்கேஸ்வரன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

5 மைல் மரதன் ஓட்டம் பெண்கள

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த குண்டுமணி தர்சிகா முதலாமிடத்தினையும் விஜயகாந்தன் விஜிதா இரண்டாமிடத்தினையும் குணரத்தினம் கோபிகா மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டனர். (க)

## மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டி; அருணோதயக் கல்லூரி புதிய சாதனை

வடக்குமாகாணப்பாடசாலைக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் அருணோதயக்கல்லூரி மாணவர்கள் திறமையாக செயற்பட்டு பல பதக்கங்க்ளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் இம்முறையும் புதிய சாதனைகள் அடங்கலாக வட மாகாணத்தில் அதிக பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட பாடசாலை என்ற பெயரினையும் பெற்று பாடசாலை சமூகத்திற்கும் வலிகாம வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

பதக்க விபரம் வருமாறு.

புதிய சாதனை நிலைநாட்டியோர்.

பி.தனுசங்கவி U 13 பெண் உயரம் (சாதனை 1.32 புதிய சாத்னை 1.34) முதலாமிடம்.

எம்.கஜவரன் U 15 ஆண் ச.வேலி (சாதனை 17.2 புதிய சாதனை 17.1) முதலாமிடம்.

கே.நப்தலியோய்சன் U 17 ஆண் கோ.பாய்தல் (சாதனை 3.40 புதிய சாதனை 3.86) முதலாமிடம்.

எம்.தனிஸ் U 17 ஆண் கோ.பாயதல் (சாதனை் 3.40 புதிய சாதனை 3.45) இரண்டாமிடம்.

எம்.சாள்ஸ் அன்ரனி U 19 ஆண் கோ.பாய்தல் (சாதனை 3.71 புதிய சாதனை 3.90) முதலாமிடம்.

ஆர்.லவணன் U 21 ஆண் கோ.பாய்தல் (சாதனை 3.54 புதிய சாதனை 3.65) இரண்டாமிடம்.

ஏ.பவித்திரா U 21 பெண் கோ.பாய்தல் (சாதனை 2.75 புதிய சாத்னை 2.96) முதலாமிடம்.

கே.நப்தலியோய்சன் U 17 ஆண் 110m சட்டவேலி மூன்றாமிடம்.

கே.கவுனியன் U 17 ஆண் நீளம் பாய்தல் மூன்றாமிடம்.

வி.சாத்விகா U 17 பெண் கோ.பாயதல் முதலாமிடம் மு.பாய்தல் முதலாமிடம் சட்டவேலி மூன்றாமிடம்.

எஸ்.மேரிநிலக்சனா U 17 பெண கோ.பாய்தல் முதலாமிடம் குண்டு போடுதல் இரண்டாமிடம்.

எஸ்.ஜஜீபன் U 19 ஆண் கோ.பாய்தல் மூன்றாமிடம்.

ஏ.பவித்திரா U 21 பெண் மு.பாய்தல் முதலாமிடம்.

ஈ.மேரிபவுஸ்தினா U 21 பெண் கோ.பாய்தல் இரண்டாமிடம்.

ஏ.பவித்திரா. ஈ.மேரிபவுஸ் தினா. யு.மேரிசுகன்யா கே.நிகேதினி நால்வரும் (4 x 100m) U 21 பெண் இரண்டாமிடம். (4 x 400m) U 21 பெண் மூன்றாமிடம்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டியில் எம்.கஜவரன் 15 வயதுப் பிரிவில் சிறந்த சுவட்டு வீரருக்கான விருதினை 100 மீற்றர் சட்ட வேலி ஓட்டத்தில் 17.1 விநாடியில் ஓடி புதிய சாதனையுடன் 629 புள்ளிகளைப் பெற்று சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)





















உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தரம் 1. 2. 3 மாணவர்களின் [illegible] திருவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ.உதயகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் தரம் ஒன்று மாணவர்கள் வாழ்த்துச் செய்தியை வழங்குவதையும் மாணவர்களின் நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோவின்...

வல் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அரச புலனாய்வு சேவைக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் அந்த அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மனோ கணேசன் இதனைக் கூறியிருந்தார்.

இதனடிப்படையில், ஊடக சந்திப்பு தொடர்பான காணொளிகளை தமக்கு அனுப்பி வைக்குமாறு அரச புலனாய்வு சேவை ஊடக நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

அரசாங்கம் கடந்த தேர்தலில் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத தீயை பற்றவைத்து, தேர்தலில் வெற்றிபெற்றதாகவும் இம்முறை மதவாதத்தை தூண்டி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற தீர்மார்னித்துள்ளதாகவும் மனோ கணேசன் இந்த ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரை பயன்படுத்தி இந்த திட்டம் செயற்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நோக்கத்திற்காகவே முஸ்லிம் மதத்தினருக்கு எதிராக கலவரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி பகைத்து கொள்ள வேண்டி வரும் என்பதால் இந்துக்களுக்கு எதிரான திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கத்தோலிக்க மதத்தினரை இலக்கு வைத்து ஞானசார தேரர் புதிய மதவாத போராட்டத்தை ஆரம்பிக்க முயற்சித்து வருகிறார்.

போர்த்துகேயரின் ஆட்சிக்காலத்தில் விகாரைகள் அழிக்கப்பட்டமை சம்பந்தமாக பாப்பரசர் மன்னிப்புக் கோர வேண்டும் என ஞானசார தேரர் கூற ஆரம்பித்திருப்பது பாப்பரசருக்கு அவமானத்தை ஏற்படுத்தும் திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கையாகும்.

உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்கர்கள் பாப்பரசரை தமது வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டுள்ளனர். கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களும் ஏனைய மதத்தினரும் அவருக்கு மரியாதை வழங்கி வருகின்றனர்.

பாப்பரசரை இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. அவரை அழைத்து அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி, அவமானப்படுத்துவதே இவர்களின் திட்டமாகும்.

இதன்மூலம் பௌத்த மதவாதத்தை தூண்டி சிங்கள பௌத்தர்களின் ஒரே தலைமைத்துவம் தாமே என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்துவதே இவர்களின் புதிய திட்டம் எனவும் மனோ கணேசன் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஊடகவியலாளர்...

வலி. வடக்கில் கடற்படை முகாம் அமைப்பதற்காக காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட இருந்த நில அளவை பணிகளுக்கு எதிராக அக்காணி உரிமையாளர்களினால் ஒன்று கூடி எதிர்ப்பு நடத்தப்பட்டது.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைகுறித்து செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களை கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

போராட்டத்தினை புகைப்படம் எடுக்க ஊடகவியலாளர்கள் முயற்சித்தபோது புகைப்படம் எடுக்க வேண்டாம் எனவும் மீறி எடுத்தால் கடற்படை முகாமை புகைப்படம் எடுத்ததாக கைது செய்யப்படுவீர் எனவும் கடும் தொனியில் கூறினர்.

அதனையும் மீறி புகைப்படம் எடுத்தவர்களின் புகைப்பட கருவி மற்றும் தொலைபேசி என்பவற்றை பறிமுதல் செய்யவும் முயற்சித்தனர்.

அத்துடன் ஒலிப்பதிவு கருவிகள் வைத்திருந்தால் அவற்றை நிறுத்தும்படியும் கூறி இருந்தனர்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் மற்றும் அங்கு ஒன்றுகூடியமக்களையும் அச்சுறுத்தும் வகையில் கடற்படை சீருடையில் நின்றவர்கள், புலனாய்வாளர்கள் மற்றும் சிவில் உடையில் நின்ற கடற்படையை சேர்ந்தவர்கள் புகைப்பட கருவி மற்றும் கைத்தொலை பேசிகளில் புகைப்படம் மற்றும் வீடியோக்களையும் எடுத்துள்ளனர். (செ-6)

## மக்கள்...

கொழும்பிலிருந்து வந்த நிளஅளவைத்திணைக்கள அதிகாரிகளும் திரும்பிச்சென்றுள்ளனர்.

யாழ்.கீரிமலை பகுதியில் படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு அமைவாக நேற்று பொலிஸாரின் விசேட பாதுகாப்புடன் காணிகள் அளவிடும் நடவடிக்கை இடம்பெறவிருந்த நிலையில் இரண்டாவது முறையாகவும் அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை காணி சுவீகரிப்பினைத்தடுத்து நிறுத்த அப்பகுதிமக்களை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஒன்று கூடுமாறு வலிவடக்கு பிரதேச சபையின் உபத விசாளர் எஸ்.சஜீவன் கேட்டுக்கொண்டிருந்தார்.

கீரிமலை சேந்தான்குளம் மற்றும் திருவடி நிலை ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ்மக்களுக்கு சொந்தமான 127 ஏக்கர் காணிகளைச் சட்டப்படி சுவீகரிக்கும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை காலை காணி அளவீடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

திருவடிநிலைப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்களினுடைய 120 ஏக்கர் காணிகளையும், சேந்தாங்குளம் ஆரோக்கியநாதர் தேவாலயத்திற்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியினையும், மற்றும் கீரிமலையில் 6 குடும்பங்களுக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணியும் சுவீகரிக்கும் நோக்கில் நிலஅளவையாளர்களைக் கொண்டு அளவீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையிலையே அந்த நடவடிக்கைதடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தக்காணி சுவீகரிப்பு நடவடிக்கையினையறிந்து அவ்விடத்திற்கு சென்ற வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் திருமதி அனந்தி சசிதரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வலி. வடக்குதவிசாளர் எஸ்.சுகிர்தன், உபதவிசாளர் ச. சஜீவன், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கந்தசாமி சதீஸ் உள்ளிட்டவர்கள் மக்களுடன் இணைந்து மேற்படி காணி சுவீகரிப்பு நடவடிக்கையினை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று கீரிமலைப்பகுதியில் காணி சுவீகரிப்புக்கான அளவீடுசெய்யும் நடவடிக்கை பொலிஸாரின் விசேட பாதுகாப்புடன் இடம்பெறவிருந்த நிலையிலேயே அதனைத்தடுத்து நிறுத்த மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு சஜீவன் வேண்டுகோள்விடுத்திருந்தார்.இந்நிலையில் குறித்த பகுதியில் நேற்று காலை ஒன்றுகூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, அக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஆகியோரும் மக்கள் பலரும் வருகைதந்திருந்தனர். அதேவேளை தமது கடுமையான எதிர்ப்பினையும் வெளியிட்டிருந்தனர்.இதனால் காணி அளவிடும் பணி இரண்டாவது முறையாகவும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (செ-6)

## தென்னா...

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் எமது பிரச்சினைகளில் தலையிடுவதை லங்கா சமசமாஜ கட்சி, கட்சி என்ற வகையில் கொள்கை ரீதியாக எதிர்க்கின்றது.

தென்னாபிரிக்காவின் உதவியானது இனவாதம் தொடர்பான அனுபவங்களை கொண்ட நாடு ஒன்றின் உதவி என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் நாம் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவது அத்தியாவசியமான விடயம்.

எனினும் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து செல்ல தென் ஆபிரிக்கா தலையிடுவது கௌரவமான சந்தர்ப்பமாக நாங்கள் கருதுகின்றோம்.

வெள்ளையின ஏகாதிபத்தியவாதிகளிடம் மிக நீண்டகாலம் துன்பங்களை அனுபவித்த நாடு என்ற வகையில் தென்னாபிரிக்காவின் அனுபவங்கள் எமக்கு வழிகாட்டும் என்பதால், சிறில் ராமபோஷவின் வருகை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அவர்கள் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்து இரண்டு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இது மிகவும் முக்கியமானது என சமசமாஜ கட்சி கருதுகிறது எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# இலங்கை மீதான ஐ.நா விசாரணை குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## விசாரணைக்குழு தேவையில்லையாம்

(புதுடில்லி)

இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை நேற்று வெள்ளிக்கிழமை புதுடில்லியில் சந்தித்து பேசினார்.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பில் இந்திய மீனவர்கள் விவகாரம், இலங்கை உள்நாட்டு போரில் பாதிப்படைந்த தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் மற்றும் இருநாட்டு வர்த்தக உறவுகள் உள்ளிட்ட பல முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு இந்த ஆண்டில் மூன்றாவது தடவையாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வந்துள்ளமை இரு நாட்டுக்கு இடையேயான உறவுகள் வலிமை பெற்றுவருவதை காட்டுவதாக இந்திய வெளியுறவுத்துறையின் பேச்சாளர் சையத் அக்பருதீன் கூறினார்.

உள்நாட்டு போருக்கு பிறகு அந்நாட்டின் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள், வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளித்தல் போன்ற விவகாரங்கள் குறித்தும் பேசப்பட்டது. இந்திய அரசு இலங்கையில் செயல்படுத்திவரும் சிறப்பு திட்டங்கள் குறித்தும் விரிவாக பேசப்பட்டன என்றார் சையத் அக்பருதீன்.

இலங்கையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்குழு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்தும் இந்த சந்திப்பின் போது ஆராயப்பட்டதா என்றும் இந்த விவகாரத்தில் இந்திய அரசின் தரப்பின் நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஐ.நா மனித உரிமைகள் விசாரணைக் குழுவை அமைக்கும் விவகாரத்தில் இந்தியா ஏற்கெனவே தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது. குறிப்பிட்ட அந்த பிரிவை எதிர்த்து வாக்களித்தது. அந்த நிலைப்பாட்டை இந்திய அரசு மாற்றவில்லை. அதே நிலைப்பாடே தொடர்கிறது என்று பதிலளித்தார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பேச்சாளர் சையத் அக்பருதீன். (செ-11)

## ஆலயத்தை...

தனது குடும்பத்தினரும் சென்று பொங்கல் செய்து வழிபட்டதாகக் கூறினார்.

இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை மயிலிட்டிக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட்டு சென்று பார்த்த போது, மருதடிச் சித்தி விநாயகர் ஆலயம் முழுமையாக அழிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

ஆலயம் இருந்த இடத்தின்அருகில் நின்றிருந்த வேப்பமரம் ஒன்றினை வைத்தே அடையாளப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

இதேபோல், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவம் அனுமதியளித்துச் சென்று பார்த்த போது, காணிக்கை மாதா ஆலயம் என்ற ஆலயம் இருந்ததாகவும், தொடர்ந்து கடந்தாண்டு (2013) சென்று பார்த்தபோது, அந்த ஆலயம் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டிருந்ததாக அங்கு வந்த ஒருவர் கூறினார்.

மேலும், மயிலிட்டி கண்ணகை அம்மன ஆலயத்தினைச் சூழவிருந்த வீடுகள் அனைத்தும் தற்போது இடிக்கப்பட்டு வீடுகள் இருந்த அடையாளமே இல்லாதிருப்பதாக மயிலிட்டி மக்கள் தங்கள் ஆதங்கங்களைத் தெரிவித்தனர்.

தற்போது, மயிலிட்டி கண்ணகை அம்மன ஆலயமும், அதன் அருகிலுள்ள தோப்புப் பிள்ளையார் ஆலயம் மற்றும் முருகன் ஆலயம் ஆகியன மட்டும் எஞ்சியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (செ-11)

## இலங்கை...

இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் இலங்கை வரவுள்ள நான்கு விசாரணையாளர்களும் 15 நாட்கள் இலங்கையில் கள நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களிடம் நேர்காணல்களையும் செய்யவுள்ளனர்.

அத்துடன் சிவில் சமூக பிரதிநிதிகள், அரசாங்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும் எதிர்பார்க்கின்றனர். மேலும் விசாரணைக் குழுவைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் இலங்கை வருவதற்கு திட்டமிட்டுள்ளார்.

அந்தவகையில் மனித உரிமை விவகாரம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைக் குழுவானது விரைவில் விசாரணை செயற்பாட்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை இலங்கை அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-11)

## வடக்கு...

யினால் தொடர்ந்து விடுக்கப்பட்டுவந்த கோரிக்கையினை புறம்தள்ளிவிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜி.ஏ. சந்திரசிறியை வடக்கு மாகாண ஆளுநராக நேற்று நியமித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக ஜி.ஏ.சந்திரசிறி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாணசபைக்கு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி தேர்தல் இடம்பெற்று அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றிபெற்று ஆட்சியமைத்திருந்தது. இந்நிலையில் மாகாணசபையின் அமர்வுகளின போது வடக்கு மாகாணத்தின் ஆளுநராகயிருந்துவரும் முன்னாள் யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதியாகயிருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அப்பதவியிலிருந்து நீக்கிவிடுமாறும் சிவில் நிர்வாகத்திற்கு ஆளுநரால் பல தடைகள் ஏற்பட்டுவருகின்றது என்றும் குற்றம்சாட்டப்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின முதலமைச்சராக தெரிவாகிய பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு ஆளுநராகயிருக்கும் ஜி.ஏ.சந்திரசிறியை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு சிவில் நிர்வாகத்துடன் தொடர்புடைய ஒருவரை நியமிக்குமாறு நேரடியாகவே கோரிக்கைவிடுத்திருந்தார்.

இதேவேளை இக்கோரிக்கையினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டதாகவும் வடக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்துவரும் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அவுஸ்ரேலியாவிற்கான இலங்கைத்தூதுவராக நியமித்துவிட்டு சிவில் நிர்வாகம் சார்ந்த ஒருவரை நியமிக்க ஜனாதிபதி முடிவெடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இருப்பினும் வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவிற்கு வந்துள்ள நிலையில் மீண்டும் ஆளுநராக ஜி.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கையினையும், வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களினாலும் தொடர்ந்து விடுக்கப்பட்டு வந்த கோரிக்கையை முற்றாக நிராகரித்துவிட்டு வடக்கின் ஆளுநராக ஜி.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி மீண்டும் நியமித்துள்ளமை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (செ-6)


### மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

பூலசிட்டி அச்செழு, நீர்வேலி ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரி.

இடம் :- நீர்வேலி சவாரித்திடல்
காலம் :- 13.07.2014
நேரம் :- பிற்பகல் 2.30 மணி

எனவே அனைத்து காளை உரிமையாளர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**பிரவேசம் 20 ரூபா மட்டும்** - நிர்வாகத்தினர் (7004)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மீனவர்...

பற்றி எங்களுடன் பேசியுள்ளனர். அப் போராட்டத்திற்கு நாம் ஆதரைவத் தெரிவித்துள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கையில் ராஜபக்ஷ அரசாங்கம், தனது இராணுவத்தினரைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு உரித்தானகாணிகளை தங்கள் இராணுவத் தேவைகளுக்காகவும், சிங்களவர்களை குடியேற்றி தமிழ் மக்கள் குடிப்பரம்பலைக்குலைத்துவிடவும் திட்டமிட்டநிகழ்ச்சி நிரலின்படி வேலைசெய்து வருகின்றது. இதனால் வடக்குக் கிழக்குத் தமிழ்ப் பிரதேசங்களிலும் இந்தியாவிலும் அகதி முகாம்களில் அகதிகளாக எம் மக்கள் சீரழிகிறார்கள். அந்தமக்கள் வாழ்வாதாரமற்றவர்களாக,விவசாயம் செய்யமுடியாதவர்களாக, சுதந்திரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாதவர்களாக, குடியிருப்புக்கள் அற்றவர்களாக 25 ஆண்டுகளாகஅடக்குமுறைக்கும், ஒடுக்கமுறைக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அரசின் தமிழின அழிப்பின் ஒரு அம்சமாகவே இந் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன.

இவற்றிற்கு எதிராகத் தென்னிலங்கை இயக்கங்களும் மக்களும் எம்மினத்தின் ஜன நாயக உரிமைகளுக்காகப் போராட முன்வந்தமையை நாம் வரவேற்கின்றோம்.

எதிர்வரும் 15.07.2014ல் யாழ் நகரில் முற்பகல் 10 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒழுங்குசெய்யப்பட்டுள்ள ஜனநாயகப் போராட்டத்தில் நாமெல்லாம் பங்குகொண்டு வெற்றி பெறச் செய்யவேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## மயிலிட்டி...

டங்களுக்கு பின்னர் இராணுவத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கண்ணகை அம்மன் ஆலயத்துடன், அருகிலுள்ள தோப்புப் பிள்ளையார் ஆலயம் மற்றும் முருகன் ஆலயம் ஆகியவற்றினையும் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி நேற்று இராணுவத்தினால் வழங்கப்பட்டுள்ளது. மயிலிட்டிப் பகுதியினைச் சேர்ந்த மக்களை மேற்குறித்த ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக யாழ். பாதுகாப்புப் படைத் தரப்பினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய முன்றலிற்கு பொதுமக்கள் நேற்றுக்காலை அழைக்கப்பட்டனர்.

தொடர்ந்து, இராணுவத்தினர், அங்கு வந்த மக்களை இராணுவ வாகனங்களில் ஏற்றி மயிலிட்டியிலுள்ள இவ் ஆலயங்களுக்குக் கூட்டிச் சென்றனர். கண்ணகை அம்மன் ஆலயத்தின் பூசை வழிபாடுகளை தொடர்ந்து இடம்பெற்றிருந்திருந்தால் நேற்று தேர் உற்சவம் இடம் பெற்றிருக்கும். எனவே தேர் உற்சம் இடம் பெறாததால் மக்கள் பொங்கல் பொங்கிபூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றன. இவ் ஆலயத்திலிலுள்ள தேர், சுவாமிகாவும்வாகனாங்கள், சிலைகள் என்பன சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.(செ-6)


BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Quick Learning Course 1 1/2 Months
(Spoken English with Grammar)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
BatchI : 14-07-2014 @09.00 & 11.00 am
BatchII : 16-07-2014 @09.00 & 11.00 am
BatchIII : 19-07-2014 @09.00am & 03.00 pm
(C-7909)



கிளிநொச்சி
ESOFT METRO COLLEGE
ESOFT Shaping Lives, Creating Futures.
The Latest style creation






Web Designing Graphics Designing
இந்திய கலைஞர்களிடம் பயிற்சி பெற்ற
அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்
Adobe Photoshop CS3 CS6 CC
CS6 CSS & Asp.net Java Script Php Web Designing
கற்கைநெறிகள் கிளிநொச்சியில்
சிறப்பம்சங்கள்
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- மேலதிக செய்முறை பயிற்சிகள்
- புதிய தலைமுறைக்கேற்ற வடிவமைப்புகள்
- கற்கைநெறி முடிவில் வேலைவாய்பை பெறும் வசதி
தற்போது குழு வகுப்புக்கள் ஆரம்பம்
further more details SMS your name with address to 077 55 888 95
NEW BATCHES A 16.07.2014 | B 19.07.2014
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO COLLEGE
No.01, Kanagapuram Road, Kilinochchi
Tel : 021 228 5444
www.esoft.lk HOTLINE : 077 55 888 95
(C-7912)



SCS SHADONI COURIER SERVICE






லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட அனைத்து நாடுகளுக்கும் 10kg இற்கு மேல் பொதிகள் அனுப்புபவர்களுக்கு விசேட விலைக்கழிவும் அதற்குக் குறைந்த நிறைகளில் அனுப்புபவர்களுக்கு விலைக்கழிவும் வழங்கப்படும்.





எதிர் வரும் 31.07.2014 வரை எமது நிறுவனத்துக்கு வருகை தரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும்
SHADONI COURIER SERVICE
272, K.K.S Road - Jaffna
(C-7908)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com



Dutch, Deutsch, French





தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-7913)



SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்





ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.- 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-7907)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.